பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

லாலா சோப்
சன்சயின் சோப்
அதிர்ஷ்டலாயச்சீட்டு
முடிவு திகதி; 28-2-2001
தங்க நாணயங்களும்
பெறுமதியான சாறிகளும்
ரிக்கற் விபரம் 10/-
**லாலா சோப்**
அச்சுவேலி
(கி-1926)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 15 ஞாயிற்றுக்கிழமை (28-01-2001) தொலைபேசி: 3378 ஒலி: 40

## குஜராத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் 15,000 மக்களை பலிகொண்டது!

(சென்னை)

இந்தியாவின் மேற்கு மாநிலங்களைத் தாக்கிய பெரும் பூமியதிர்ச்சியினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பதினைந்துக்கும் அதிகமாகி விட்டதெனஅஞ்சப்படுகிறது.

இப்பகுதிகளில் மீட்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து நிலைமைகள் தெளிவாக வெளிவரத் தொடங்கியுள்ளது.

சுமார் 45 செக்கன்களுக்கு நீடித்த பூமியதிர்ச்சியினால்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## தொழிற்கட்சி எம்.பிக்களுடன் அன்ரன்பாலசிங்கம் சந்திப்பு

(லண்டன்)

பிரித்தானியாவின் தொழிற் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சந்தித்து வருவதாக சுவர்ணவஹினி நேற்று செய்தி வெளியிட்டது.

விடுதலைப் புலிகளை பிரிட்டனில் தடை செய்யக்கூடாதென்பதை பிரதமர் ரொனி பிளேயரிடம் வலியுறுத்துமாறு கோரியே இச்சந்திப்பு இடம் பெற்று வருவதாகவும்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# ★ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களின் போது நம்பிக்கை ஏற்பட்டால் மட்டுமே அரசு யுத்தநிறுத்தம்மேற்கொள்ளும்

## ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு விசேட நிருபர்)



தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்து அவர்களுடனான பேச்சுவார்த்தை அரசுக்கு நம்பிக்கை தரக்கூடியதாக இருந்தால் மட்டுமே விடுதலைப்புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்வது சம்பந்தமான அரசு பரிசிலனை செய்யும். ஆனால் உடனடியான யுத்தநிறுத்தம் தற்போது சாத்தியம் இல்லை'

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது நம்பிக்கை ஏற்படும் வரைக்கும் தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் தொடரும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று முன்தினம் சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பிக்கள், அமைச்சர்கள், கட்சிஅமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது உறுதிபடக் கூறினார்.

சுதந்திரக்கட்சி கூட்டம் சுமார் அறுமணித்தியாலங்கள்வரை நீடித்தது.

தற்போது நாடு எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிநிலைகளிலும் விடுதலைப்புலிகள் இரண்டாவது தடவையாக அறிவித்த யுத்த

கொண்ட முதலாவது கூட்டமும் இதுவாகும்.

ஜனாதிபதி இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

தற்போது வடக்குகிழக்கு மாகாணங்களில்இடம்பெற்று வரும் யுத்தத்தினால் செலவு

## கைதடி சென்று வந்த 200பேர் பொலிஸாரால் கைது

(கோப்பாய்)

கைதடி மற்றும்நாவற்குழிப் பகுதிக்குச் சென்று தமது உடமைகளை மீட்டுக் கொண்டு வந்தசுமார் இருநூறுக்குமேற்பட்டோர் நீர்வேலி தரவை பகுதியில் வைத்து, இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆண்கள் பெண்கள் உட்படசுமார் இருநூறுக்கு மேற்பட்டோரும் பொருட்களுடன் இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்டு, கோப்பாய்பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில்திடீர்தேடுதல் 20 தமிழ் இளைஞர் கைது

(திருமலை)

திருகோணமலை புளியங்கூடல் பகுதியில் திடீர் தேடுதல் ஒன்றை மேற்கொண்ட படையினர் 20 தமிழ் இளைஞர்களை கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 4 30 மணியளவில் இடம் பெற்ற இத்

கைது செய்யப்பட்ட 20தமிழ் இளைஞர்களில் ஏழு பேர் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய பதின்மூன்றுதமிழ் இளைஞர்களும் மேலதிக விசாரணையின் பொருட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்



[illegible]
போது சாத்தியம் இல்லை

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது நம்பிக்கை ஏற்படும் வரைக்கும் தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் தொடரும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று முன்தினம் சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பிக்கள், அமைச்சர்கள், கட்சிஅமைப்பாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது உறுதிபடக் கூறினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டம் சுமார் ஆறுமணித்தியாலங்கள்வரை நீடித்தது.

தற்போது நாடு எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்க டிநிலைகளிலும் விடுதலைப்புலிகள் இரண்டாவது தடவை'யாக அறிவித்த யுத்த நிறுத்தத்திற்குப் பின்புஜனாதிபதி சந்திரிகா கலந்து கொண்ட முதலாவது கூட்டமும் இதுவாகும்.

ஜனாதிபதி இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

தற்போது வடக்குகிழக்கு மாகாணங்களில்இடம்பெற்று வரும் யுத்தத்தினால் செலவு அதிகரித்துச் சென்றுள்ளதா

→ 8ஆம் பக்கம் பார்க்க

பட்டுள்ளனர்.

# திருமலையில்திடீர்தேடுதல் 20 தமிழ் இளைஞர் கைது

(திருமலை)

திருகோணமலை புளியங்கூடல் பகுதியில் திடீர் தேடுதல் ஒன்றை மேற்கொண்ட படையினர் 20 தமிழ் இளைஞர்களை கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 4 30 மணியளவில் இடம் பெற்ற இத் திடீர் தேடுதலின் போது கைது செய்யப்பட்ட 20தமிழ் இளைஞர்களில் ஏழு பேர் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய பதின்மூன்றுதமிழ் இளைஞர்களும் மேலதிக விசாரணையின் பொருட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# இலங்கை-ரஷ்ய நாடுகள் உடன்பாட்டில்கைச்சாத்து

[கொழும்பு]

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பான கூட்டு அறிக்கையொன்றில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும், ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இகோர்இவனோவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

ரஷ்யாவுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ரஷ்யாவில் தங்கியிருக்கும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கடந்த வியாழக் கிழமை தலைநகர் மொஸ்கோவில் வைத்து அவ் அறிக்கையில் கைச்சாத்திட்டார்.

→ 8ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தத்தில் சந்தேகமெனில் கண்காணிப்பு குழுவை நியமிக்கலாம்

## அரசிற்குமுன்னாள் இந்.தளபதிஆலோசனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு சந்தேகம் இருக்குமானால் அவர்களின் யுத்த நிறுத்த அறிவிப்பு தொடர்பான உண்மை நிலையை அறிந்து கொள்ள யுத்த நிறுத்தக்கண் காணிப்புக் குழுவொன்றை ஏற்படுத்தலாம்.

முன்னாள் இந்தியக் கடற்படைத் தளபதி எல்.ராம்தாஸ் மேற்கண்டவாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தேசியசமய மற்றும் சமாதான மாநாட்டில் கலந்து கொண்ட தளபதி ராம்தாஸ் விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பில் அரசுக்கு சந்தேகம் எழுந்துள்ளமை

(8.ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர்கள் நாளை வேலைநிறுத்தம்

## அவசர சிகிச்சைகள் மட்டுமே இயங்கும்

(யாழ்ப்பாணம்)

2000ஆண்டுச்குரிய விசேட மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படாமை குறித்து வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சசெர்ந்த இடமாகக் கொண்ட அரச வைத்தியர்கள் இம்மாதம் 29ஆம் திகதி ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக அறிவித்துள்ளனர். மேற்படி தினத்தன்று யாழ். போதனாவைத்தியசாலையில் அவசர சிகிச்சைகள் வழங்கும் பணிகள் மட்டுமேநடைபெறும் எனவும் அன்று முழுவதும் வெளி நோயாளர் பிரிவு, கிளினிக்குகள் என்பன நடைபெற மாட்டாது எனவும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ், மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கத்தின் செயலாளர் வைத்தியகலாநிதி சி, குமரவேல் விடுத்த அறிக்கையில் கிழக்கில் கடமையாற்றும் அரச வைத்திய அதிகாரிகளுள் வட

(8-ம் பக்கம் பார்க்க)

# பாக். இராணுவத்தளபதி திங்கள் கொழும்பு வருவார்

(கொழும்பு)

பாகிஸ்தான் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மெரிக்மட் யூசுப்கனன் ஒரு வாரகால விஜயத்தை மேற்கொன்டு நாளை மறுதினம் கொழும்பு வரவுள்ளார்.

எதிர்வரும் 4ம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் சுதந்திரதினக்கொண்டாட்ட வைபவங்களில் கலந்துகொள்வதற்காகவே இவர் கொழும்பு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கொழும்பில் தங்கியிருக்கும் காலங்களில் ஜனாதிபதிசந்திரிகாவையும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பிலந்த பலகல்ல

→ 8ஆம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

விஸ்வ குலத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு33-40 வயதுக்கு இடைப்பட்ட 7 ல்செவ்வாய்க் குற்றமுள்ள மணமகன் தேவை. விவாகரத்துப் பெற்றவர்களும், தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு விளம்பர இலக்கம் 2463, C/o வலம்புரி, இல 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். (2463)

### காணி விற்பனைக்கு

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பூநாறிமடத்தடியில் 3 பரப்புக்காணி (பயன் தருமரங்களும்உண்டு) விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 14, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (2463)

# பருத்தித்துறை நகரசபையில் நிரந்தர செயலாளர் இல்லை

# செயற்பாடுகள் மந்த கதியில்

(மந்திகை)

பருத்தித்துறை நகரசபையில் செயலாளர் வெற்றிடம் நீண்டகாலமாக வெற்றிடமாக இருப்பதால் நகரசபை செயற்பாடுகள் மந்தகதியில் நடைபெறுவதாக நகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இங்குள்ள செயலாளர் வெற்றிடத்திற்கு காலத்திற்கு காலம் வருட ஒப்பந்த அடிப்படையிலேயே செயலாளர்நியமனம் இடம்பெற்று வருகிறது

கடந்த வருடம் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெற்றவருடைய பதவிக் காலம் கடந்த மார்கழி 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தபோது இதுவரை செயலாளர் வெற்றிடம் நிரப்பப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இங்கு சுகாதார பரிசோதகர், தொழில் நுட்ப உத்தியோகத்தர், நூலகர், வருமானப் பரிசோதகர், பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகிய பதவி வெற்றிடங்களும் நிரப்பப்படாது இருப்பதாக கூறப்படுகிறது. (உ-23)

## சமூர்த்தி செயலணி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட ஜே-100, ஜே-102 கிராம சேவகர் பிரிவுகளுக்கான சமுர்த்தி செயலணி அமைக்கும் கூட்டம் இன்று பி. ப. 3 00 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு மேற்படி கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கேட்டுள்ளனர். (உ-3)

## புதியகட்டடம் அமைப்பு

(கல்வயல்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் புதிதாக வகுப்பு அறைக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

போதிய வகுப்பறைகள் இன்றி மாணவர்கள் எதிர் நோக்கிய இடப்பற்றாக் குறையை நீக்கும் முகமாக சுமார் நாற்பது அடி நீளமான புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது.

பல வருடகாலமாக இப்பாடசாலையில் புதிய கட்டடங்கள் எதுவும் அமைக்கப்படாது இருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-111)

## மீன் விலை அதிகரிப்பு பாவனையாளர் பாதிப்பு

(செம்பியன்பற்று)

வடமராட்சிப் பகுதியில் மீன் விலை வெகுவாக அதிகரித்துள்ளது. தற்பொழுது ஒரு கிலோ மீனின் விலை இருநூறு ரூபா முதல் முன்நூறு ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போதைய நாட்டுச்சூழ்நிலை காரணமாக மீனவர் கடற்றொழிலுக்குச் செல்வது குறைவாக உள்ளமையும், இப்பகுதியில் ஏற்பட்டுள்ள திடீர் பாவனையாளர் அதிகரிப்புமே இவ் விலையேற்றத்திற்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (செ-42)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சந்தை செல்வாபுரம் செல்வா சனசமூக நிலைய 2001 ஆம் வருடத்திற்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

தலைவராக தி. பரமேஸ்வரன், உப தலைவராக எஸ். டெலிக்குமார், செயலாளராக பிலிப் மரியநாயகம், உப செயலாளராக கே. விஜயலட்சுமி, பொருளாளராக வி. யேசுராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

## மூன்றாவது பாகத்தினை பெற்றுக் கொள்க!

[ஈச்சமோட்டை]

அஞ்சல்வழி விவிலிய (பைபிள்) கல்விப் பயிற்சிநெறியில் பங்குபற்றும் பயிற்சியாளர்களுக்கான 3 ஆவது பாகம் வெளிவந்துவிட்டது.

இதைப் பெறவிரும்புவோர் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியின் முன் உள்ள கிளறீசியன் பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறும் அருட்தந்தை கொன்ஸ்ரன்ரைன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

விரைவாக பெற்றுக் கொள்வதனால் பயிற்சியை உடன் ஆரம்பிக்க உதவியாய் இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-59)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம் மாதம் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

(நேற்றைய தொடர்ச்சி)

155606 ஏ
155606 சி
158282 ஏ
164751 ஏ
165139 டி
165139 டி
165139 எப்
165152 ஏ
165222 ஏ
165222 சி
167155 ஏ
167155 சி
197290 ஏ
167290 சி
167949 பி
169477 ஏ
169676 ஏ
169684 பி
169698 ஏ
172338 ஏ
172338 சி
172504 ஏ
172504 சி
172595 ஏ
172604 பி
174409 பி
174410 ஏ
174410 சி
174410 ஈ
174414 ஏ
174414 சி
174414 ஈ
174446 ஏ
174551 ஏ
174552 ஏ
174586 ஏ

155606 பி
155606 டி
158282 பி
165139 ஏ
165139 பி
165139 சி
165139 ஈ
165148 ஏ
165190 ஏ
165222 பி
165429 ஏ
167155 பி
167155 டி
167290 பி
167949 ஏ
169464 ஏ
169487 ஏ
169684 ஏ
169684 சி
169875 ஏ
175338 பி
172351 ஏ
172504 பி
172577 ஏ
172604 ஏ
174409 ஏ
174409 சி
174410 பி
174410 டி
174410 எப்
174414 பி
174414 டி
174415 ஏ
174446 பி
174551 பி
174586 பி

### கோப்பாய்

177414 டி
177418 பி
177437 ஏ
177440 ஏ
177441 ஏ
177442 ஏ
177442 சி
177449 பி
177449 டி
177456 ஏ
177463 பி
177477 ஏ
177480 ஏ
177489 ஏ
177489 சி
177489 ஈ
177489 ஜி
177498 ஏ
177503 ஏ
179514 ஏ
179526 ஏ
179537 ஏ
180625 ஏ
180636 பி
180636 டி
180680 ஏ

177418 ஏ
177432 ஏ
177437 பி
177440 பி
177441 பி
177442 பி
177449 ஏ
177449 சி
177451 ஏ
177463 ஏ
177470 ஏ
177477 பி
177480 பி
177489 பி
177489 டி
177489 எவ்
177493 ஏ
177502 ஏ
177513 ஏ
179514 பி
179530 ஏ
179537 பி
180636 ஏ
180636 சி
180658 ஏ
180680 பி

## கும்பாபிஷேக கிரியைகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோவில் ஜீர்ணோத்தாரண பிரிதிஷ்டா மஹா கும்பாபிஷேக கிரியைகளில் இன்று.

விசேஷ சந்தி, பூதசுத்தி, யாகபூசை, திரவிய ஹோம், யாக தீபாராதனை, எண்ணெய்க் காப்பு பூர்த்தி, பிம்ப சுத்தி, மூர்த்தி ரக்ஷா பந்தனம், நியாசங்கள், ஸ்பர்சாகுதி, யாக தீபாராதனை, சிவாசார்ய பூஜனம் ஆகிய கிரியைகள் இடம் பெறவுள்ளது. (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

இணுவில், மருதனார், சுன்னாகம் அருள்மிகு ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய கோயில் நூதனப் பிரதிஷ்டா மாக கும்பாபிஷேக கிரியைகளில் இன்று,

விஷேட சந்தி பூதசுத்தி, யாக பூஜை, விஷேட திரவிய

## வறியோர்க்கு வீடுகள்

(இணுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த தாவடி, உடுவில், கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள வறியமக்களுக்கு ஜி.ரி.சற். நிறுவன உதவியுடன் வீடுகள் அமைத்துக் கொடுக்க ஏற்பாடாகியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், தாவடி தெற்கு பகுதியில் 15 வீடுகளும், உடுவில் பகுதியில் 15 வீடுகளும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-49]

## கிராம சேவையாளர் இடமாற்றம்

(சங்கானை)

தொல்புரம்மேற்கு ஜே/169 பிரிவு கிராம சேவையாளர்

## தேவாலயம் புனரமைப்பு

[அச்சுவேலி]

கோப்பாய் புனித கன்னி மரியாள் தேவாலயத்தின் புனரமைப்புப்பணிகள் தேவாலய நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் முதற்கட்டமாக இவ் ஆலயத்தின் முற்புற கோபுரத்தின் திருத்தவேலைகள் இடம்பெற்று வருவதுடன் ஆலயசுற்றுப்புறமும் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இவ்வாலயத்தின் முற்புற வாசல் கோபுரத்தில் கடந்த வருடம் இடிமின்னல் வீழ்ந்ததன் காரணமாக கோபுர மேற்பகுதி சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-14)

## நிந்கா!

வீடுகளும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

[உ-49]

# கிராம சேவையாளர் இடமாற்றம்

(சங்கானை)

தொல்புரம்மேற்கு ஜே/169 பிரிவு கிராம சேவையாளர் சோதி சுந்தரலிங்கம் மருதங்கேணிப் பகுதிக்கும், சுழிபுரம் மேற்கு ஜே/172 பிரிவு கிராம சேவையாளர் வைத்தியநாதன் தொல்புரம் மேற்கு பகுதிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தொல்புரம் மேற்கு பகுதியும் ஜே/ 172 பிரிவு கிராம சேவையாளரின் கீழ்ச் செயற்படும் எனவும், இவரது அலுவலகம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிப் பகுதியில் இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-ப-18)

## சமுகமளிக்கும்படி வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

பத்தொன்பது வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளது.

இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களை நியமனம் செய்வதற்காக சகல கிரிக்கெட் மத்தியஸ்தர்களையும் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 10.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரிக்குச் சமுகமளிக்கும் படி, யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் எஸ். சிறீகாந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். (செ)

கிரியைகள் இடம் பெறவுள்ளது. (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

இணுவில், மருதனார், சுன்னாகம் அருள்மிகு ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய கோயில் நூதனப் பிரதிஷ்டா மாக குடபாபிஷேக கிரியைகளில் இன்று,

விஷேட சந்தி பூதசுத்தி, யாக பூஜை, விஷேட திரவிய ஹோமம், தீபாராதனை, வேதம் ஸ்தோத்திர பாராயணம், புண்ணியாக வாஸனம், விஷேட பஞ்ச திரவிய பூஜை, பிம்பசுத்தி, பிம்ப ரக்ஷாபந்தனம், பூர்வ பச்சிம சந்தானங்கள், யாகபூசை, ஹோமம் தீபாராதனை வேதஸ்தோத்திர பாராயணம் ஆகிய கிரியைகள் இடம் பெறவுள்ளது.

[செ]

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக் குளி அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் புனராவர்த்தன உத்தமயாக நவ குண்ட பக்ஷமாயாக கும்பாபிஷேக கிரியைகளில் இன்று,

எண்ணெய் காப்பு சாத்தல், விநாயகர் வழிபாடு, பூதசுத்தி, ஆசார்யா யாகசலா பிரவேசம், யாகபூசைபாபனாபிஷேகம், மாலா மந்திர ஹோமம் விஷேட திரவிய ஹோமம் பூஜை, விநாயகர் வழிபாடு, விம்பசுத்தி, மூர்த்திகள் இராக்ஷ பந்தனம் நியாசம் பூர்வசந்தானம், யாகபூஜை, ஹோமம் பச்சிய சந்தானம, பூர்ணகுதி விஷேட பூஜை, பூஜை, உபசாரங்கள், ஆசார்யா உபசாரம் ஆகிய கிரியைகள் இடம் பெறவுள்ளது. [செ]

| | |
|---|---|
| 177489 சி | 177489 டி |
| 177489 ஈ | 177489 எவ் |
| 177489 ஜி | 177493 ஏ |
| 177498 ஏ | 177502 ஏ |
| 177503 ஏ | 177513 ஏ |
| 179514 ஏ | 179514 பி |
| 179526 ஏ | 179530 ஏ |
| 179537 ஏ | 179537 பி |
| 180625 ஏ | 180636 ஏ |
| 180636 பி | 180636 சி |
| 180636 டி | 180658 ஏ |
| 180680 ஏ | 180680 பி |
| 180692 ஏ | 180825 ஏ |
| 180830 ஏ | 180830 பி |

### மருதங்கேணி

| | |
|---|---|
| 149914 ஏ | 174554 ஏ |
| 174554 பி | 174554 சி |
| 174677 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 156893 ஏ | 170674 ஏ |
| 170677 ஏ | 170689 ஏ |
| 170759 ஏ | 170798 ஏ |
| 170798 பி | 170798 சி |
| 170991 ஏ | 170992 ஏ |
| 170995 ஏ | 170998 ஏ |
| 171302 ஏ | 171302 பி |
| 171406 ஏ | 177107 ஏ |
| 177113 ஏ | 177113 பி |
| 177119 ஏ | 177134 ஏ |
| 177134 பி | 177134 சி |
| 177134 டி | 177134 ஈ |
| 177140 ஏ | 177140 பி |
| 177141 ஏ | 177141 பி |
| 177141 சி | 177141 டி |
| 177142 ஏ | 177142 பி |
| 177145 ஏ | 177145 பி |
| 177145 சி | 177145 டி |
| | 177150 பி |
| 177150 ஏ | 177151 ஏ |
| 177153 ஏ | 177158 ஏ |
| 177277 ஏ | 177304 ஏ |
| 177304 பி | 179524 ஏ |
| 179553 ஏ | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 133035 ஏ | 148579 ஏ |
| 148579 பி | 148579 சி |
| 148579 டி | 148579 ஈ |
| 151691 ஏ | 155082 ஏ |

| | |
|---|---|
| 172604 பி | 174409 ஏ |
| 174409 பி | 174409 சி |
| 174410 ஏ | 174410 பி |
| 174410 சி | 174410 டி |
| 174410 ஈ | 174410 எப் |
| 174414 ஏ | 174414 பி |
| 174414 சி | 174414 டி |
| 174414 ஈ | 174415 ஏ |
| 174446 ஏ | 174446 பி |
| 174551 ஏ | 174551 பி |
| 174552 ஏ | |
| 174586 ஏ | 174586 பி |
| 174587 ஏ | 174587 பி |
| 174595 ஏ | 176061 ஏ |
| 176061 பி | 176061 சி |
| 176077 ஏ | 176170 ஏ |
| 176367 ஏ | 177614 ஏ |
| 177614 பி | 177614 சி |
| 177614 டி | 177614 ஈ |
| | 177659 ஏ |
| 177661 ஏ | 177801 ஏ |
| 177801 பி | 177893 ஏ |
| 177893 பி | 177905 ஏ |
| 177936 ஏ | 177995 ஏ |
| 178005 ஏ | 180390 ஏ |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 168228 ஏ | 168228 பி |
| 168228 சி | |

### உடுவில்

| | |
|---|---|
| 167558 ஏ | 167558 பி |
| 167558 சி | 173914 ஏ |
| 174120 ஏ | 174120 பி |
| 174120 சி | 177087 ஏ |
| 177092 ஏ | 177092 பி |
| 177092 சி | 177092 டி |
| 177245 ஏ | 177245 பி |
| 177257 ஏ | 177279 ஏ |
| 177291 ஏ | 177291 பி |
| 177271 சி | 177291 டி |
| 177296 ஏ | 177307 ஏ |
| 177308 ஏ | 177309 ஏ |
| 177309 பி | 177309 சி |
| 177309 டி | 178585 ஏ |
| 178585 பி | 178585 சி |
| 179517 ஏ | 179517 பி |
| 179517 சி | 179529 ஏ |
| 179545 ஏ | 179545 பி |

ஆலயசுற்றுப்புறமும் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இவ்வாலயத்தின் முற்புற வாசல் கோபுரத்தில் கடந்த வருடம் இடிமின்னல் வீழ்ந்ததன் காரணமாக கோபுர மேற்பகுதி சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-14)

# நிரந்தர நியமனம்

(ஆவரங்கால்)

வலி கிழக்கு பிரதேச சபையின் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 21 பேருக்கு, மேற்படி பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கத்தின் தீராத முயற்சியின் பேரில், உள்ளூராட்சி ஆணையாளரினால் இம்மாதம் முதலாம் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வந்த வருமான மேற்பார்வையாளர் - மு.தயாபரன், காரியாலய காரிய சகாயர் பூ.லிங்கநாதன், செல்வி இ. லக்ஸகா. நூலக சேவகர் செல்விகள் செ.ரதிதி. சுகந்தினி, நூலகத் தொழிலாளர்-செல்விகள் கு.அகிஷா, ந.சிறிரதி, செ.ஜெசிந்தா வி விஜிதா, வே.சந்திரமோகன். சுகாதாரத் தொழிலாளர் சி. சிவகுமார், சி.லிங்கராசா, சி.விக்னேஸ்வரன், க.கவீந்திரராசா, ம.சசிக்குமார் து.ஜெகதீஸ்வரன், கி.இராசையா, ந.விநாயகமூர்த்தி, வாகனச்சாரதி ப.விசுவநாதன் ஆகியோர்க்கே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (உ-57)

# அனைத்து நன்மைகளையும் பெறுவதற்கு அருள் மிகு ஸ்ரீ ஆஞ்சநேயரை வழிபடுவோம்

★ பிரம்ம ஸ்ரீ காரை கு. சிவராஜசர்மா ★

சிரஞ்சீவியாகச் சீரும், சிறப்பும் பெறுபவர் ஸ்ரீ ராம பக்த ஆஞ்சநேயர். தீரேதா யுகத்தில் சஞ்சீவியான இவரது புகழ்துவாபர யுகத்தில் மேலோங்கி கலியுகத்தில் காணுமிடமெங்கும் தமது பக்தர்களுக்கு பரிபூரண அருளை வழங்கி வருகிறார். நவக்கிரக தோசங்கள் விலகி கடன் தொல்லையில் இருந்து விடுபட, சர்வபயமும் நாசமாக பகவான் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் துயரத்தையே போக்கிய ஸ்ரீ ஆஞ்சநேயரை வழிபடுங்கள்.

### தியான மந்திரம்

நல்லறிவு, தேகபலம், புகழ் தைரியம், பயமின்மை, நோயற்றவாழ்வு, சோம்பலின்மை, வாக்குவன்மை ஆகிய எட்டு நற்பலன்களையும் தன்னைத் துதிப்பவர்களுக்கு அருளக் காத்திருக்கிறார், ஸ்ரீமத் ஆஞ்சநேயர் என்று தியான மந்திரம் கூறுகின்றது.

### ஆஞ்சநேயர் பிறப்பு

பரமசிவனின் ஒளி மிகுந்த தேஜஸை மனதில் சுமந்தபடி மேருமலைச் சாரலில் வாயு பகவான் உலாவும் பொழுது, அஞ்சனை என்ற அழகிய பெண்ணைக் கண்டு ஆசை கொண்டு மனத்தால் வரித்த மாத்திரத்தில் பிறந்தவர் தான் ஆஞ்சநேயர்.

### புத்தியும் கல்வியறிவும்

சூரிய தேவனையே தன் குருவாகக் கொண்டு வேத சாஸ்திரங்களைக் கற்க விரும்புகிறார் அனுமான். அதற்கு சூரிய பகவான் கண்ணிமைக்கும் நேரம் கூட நிற்காமல் சுழன்று கொண்டே இருக்கும் என்னிடம் நீ பாடம் கேட்பது சாத்தியமா என்றுவினவ, சற்றும் தயங்காமல் ஆஞ்சநேயர் ''தாங்கள் ரதத்தில் சென்று கொண்டே இருங்கள் நான்தாங்கள் செல்லும் வேகத்திற்கு இணையாக பின்புறம் வந்து கொண்டு தங்களிடம் வேதம் கற்றுக் கொள்கிறேன்'' என்று கூறி தன் கல்வியறிவை தமது கடின உழைப்பாலும், அபார குருபக்தியாலும் பெறுகிறார் ஆஞ்சநேயர். கல்வி ஞானத்தையும் நல்ல புத்தி அறிவையும் பெற ஆஞ்சநேயரை வழிபாடு செய்வது முற்றிலும் பொருத்தமானதாகும்.

### தேகபலம்

ஆஞ்சநேயர் குழந்தையாக இருந்த பொழுது சூரியனைப் பழம் என்று எண்ணி பிடிக்கச் சென்றார். அப்பொழுது இந்திரன் ஆஞ்சநேயரை சரியாகப் பாராது ஏதோ அரக்கன் என்று அவசரமாக முடிவு செய்து தன் வஜ்ராயுதத்தை தூக்கி ஆஞ்சநேயர் மீது எறிந்தான். இதனால் அனுமான் பிரக்ஞையற்று பூமியில் விழுந்தான். வாயுதேவன் இந்திரன் மீது சினங் கொள்ள தன் தவறுக்கு வருந்தி இந்திரன் தான் செய்த தவறுக்கு பரிகாரமாக தன் வஜ்ராயுதம் பட்ட ஆஞ்சநேயரின் மேனியை அழிக்க முடியாத வஜ்ர தேகமாக இருக்க அனுக்கிரகித்தான் உடல் வலிமை, பலம் வேண்டுவோர் ''ஜெய் விஜ்ரங்காயா'' என ஆஞ்சநேயரைத் தொழ உடலானது உறுதி பெற்றுத் திகழும்.

### புகழ்

அறிவு, அன்பு, ஆற்றல், தியாகம் இவற்றின் உருவமான அனுமானைச் சிரஞ்சீவியாக்கிய தன் கருத்து இப் பண்புகளுக்கு உலகில் அழிவில்லை என்பதைக் குறிக்கவேயாகும். கம்பன் தனது காப்பியத்தில், ''வேத நன்நூல் உய்த்துள காலமெல்லாம் புகழொடும் ஓங்க நிற்பான்'' என்று ஆஞ்சநேயரைக் குறிப்பிடுகிறார். எனவே, ஆஞ்சநேயரை உள்ளன்போடு துதிப்பவர்கள் வாழ்வில் புகழ் பெற்று விளங்குவார்கள்.

### தைரியம்

சீதையைக் காப்பாற்றி அவளுக்கு ஆறுதல் தந்தவர் ஆஞ்சநேயர். வாழ்வில் நம்பிக்கையிழந்து மனஉறுதி இழந்த நேரத்தில் மனோதைரியத்தைப் பெற வழிபடத் தகுந்தவர். ஆஞ்சநேயரே.

### பயமின்மை

இராம பிரானுக்காக சீதையைத் தேடிக் கண்டுபிடிக்க அனுமான் கடலைத் தாண்டிச் சென்று வந்தார். அப்பொழுது அனுமானின் வல்லமையை சோதிக்க விரும்பிய தேவர்கள் ''கரசி''என்ற அரக்கியை அனுப்பி வைத்தார்கள். அவளை மிகுந்த சுலபமாக வென்றார். மீண்டும்''அங்காரதாரை'' என்ற பூதத்தையும் அனுப்பிவைத்தார்கள். இராம நாமத்தை உச்சரித்தபடி அப்பூதனையை போரிட்டு வென்றார். வாழ்வில் பயமின்மையைப் பெற ஆஞ்சநேயர் வழிபாடு செய்வதுசாலப் பொருத்தம் எனலாம்.

### நோயற்ற வாழ்வு

நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் ''நோயற்ற வாழ்வு வாழ சிரஞ்சீவி ஆஞ்சநேயரை வழிபாடு செய்வது சிறந்தது.

### சோர்பலின்மை

எத்தனை தடைகள், துன்பங்கள் நேர்ந்த போதிலும் மனம் சோர்வடையாமல் சீதையைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணியைத் தொடர்ந்து மேற்கொண்ட ஆஞ்சநேயரை வழிபாடு செய்தால் சோம்பலின்மை என்னும் ஆற்றலைப் பெறலாம்.

### வாக்குவன்மை

சீதையை என்று தொடங்கினால், இராமர் துயர் மிகுதியில், சீதை இல்லாதவனாகி விட்டான் என்று தவறாகப் புரிந்து கொண்டு விடப் போகிறாரே என்பதால் ''கண்டேன் சீதையை'' என்று கூறிக் கொண்டே இராமரிடம் போகின்றார். சொல்லின் செல்வராகிய ஆஞ்சநேயரைத் தவிர யாருக்கு வரும் இந்த நாநலம் தன் வாக்குவன்மையை பளீரென ஒளிவிடப் பேசிய அனுமானது உரையைக் கேட்ட இராமன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வாக்கு வன்மை பெற ஆஞ்சநேய வழிபாடு செய்தல் மிகவும் சிறப்பு.

### வழிபடும் முறை

தங்கள் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற விரும்புகிறவர்கள் வெற்றி பாமாலை சாத்தியும், துளசி பத்திரத்தினாலும், வெண்ணை சாத்துப்படி செய்தும், காய்கறி மாலை சாத்தியும், அறுகம் புல்மாலை சாத்தியும் வழிபாடு செய்து வருகின்றார்கள்.

நவக்கிரஹங்களில் சனியும் ராகுவும் கெடுதி செய்யக் கூடிய கிரகங்கள். இவர்களைத் திருப்திப் படுத்த ராகுவுக்குப் பிரியமான உழுந்தும், சனிக்கும் பிரியமான எள்ளெண்ணையும் சாத்தி வழிபடுதலுக்கு பதிலாகசிரஞ்சீவி ஆஞ்சநேயருக்கு மிளகு மட்டும் சேர்க்கப்பட்ட வடையால் வடை மாலை சாத்தி வழிபாட்டில் பூரண பலனை பெறலாம் என முன்னோர்கள் கூறியுள்ளனர்.

தனி மனிதனுக்கு வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளை சாதனைகளாக்கவும், கிரஹ தோசம் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கவும், கல்வி கேள்விகளில் வல்லவராகவும், வாழ வழி இன்றி அவதிப் படுவோர்க்கு ஆறுதல் கிடைக்கவும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயரை வழிபாடு செய்யுங்கள்.

தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தகைமை கொண்ட ஆஞ்சநேயரை நாமும் உள்ளன் போடும் உள்ளத்தூய்மையோடும் வழிபட்டு வாழ்வில் புத்தி பலம் புகழ், தைரியம், பயமின்மை நோயற்ற வாழ்வு, சோம்பலின்மை, வாக்குவன்மை முதலான நல்லாற்றல்களை அடைவோமாக.

ஸ்ரீ ராம்! ஜயராம்
ஜய ஜய ராம்!

## இராசி பலன்

28-01-2001
(தை 15, ஞாயிறு)
சதுர்த்தி பி இ 2.10 வரை
பூரட்டாதி பி.இ 2 36
ராகுகாலம் 5.06-6 36
நல்ல நேரம் 9.36 -11.06
சித்தாமிர்தம், சதுர்த்தி விரதம்

**மேடம்**
பொருள் வரவு, முயற்சி ஜெயம், சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப சுகம்.

**இடபம்**
தொழில் மேன்மை, முயற்சிகள் கைகூடும், அதிகாரநிலை, நிலைமாற்றம்.

**மிதுனம்**
பிரயாணம், மனத்திற்கு அச்சம் தோன்றுதல், உடல் உழைப்பு, முயற்சிமந்தம்.

**கடகம்**
தேவையற்ற பிரச்சினை, கடன் தொல்லை, காரியம் தடங்கல், பிரயாண பயம்.

**சிங்கம்**
விருந்துபசாரம், களஸ்திர சுகம், வாகன வசதி, கௌரவமான நிலை.

**கன்னி**
எதிரிகளால் நன்மை, முயற்சி விருத்தி, நோய் குணமடையும், சந்தோஷம்.

**துலாம்**
தாழ்வு நிலை வியாதி, சோகமான சம்பவம், கலகம்.

**விருச்சிகம்**
உறவினர்கள் வெறுப்பு, துணிவு ஏற்படாது, அரச நன்மை, முயற்சி தாமதம்.

**தனுசு**
பிரயாணம், இளைய சகோதரர் உதவி, அன்னியர் சந்திப்பு, காரிய ஜெயம்.

**மகரம்**
தலைவியாதி, வாக்குக் கலகம், மதிப்புக் குறைவு, காரிய தாமதம்.

**கும்பம்**
ஆழ்ந்தசிந்தை, சயன சுகம், நல்ல உணவு கிடைத்தல், உடல் நலம்.

**மீனம்**
காரிய தாமதம், உணர்ச்சி வசப்படல், தொழில் லாபம், சயன சுகக் குறைவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## சாவ. கைத்தொழில் வணிகர்மன்றம்

# இடம்பெயர்ந்தோர் துயர் போக்க முன்மாதிரித் திட்டங்கள் அமுல்

(மந்திகை)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தில் கடன் பெற்றவர்கள், கடன்களை திருப்பி செலுத்தும் காலம் நீடிக்கப்பட்டதோடு வட்டி வீதமும் 50 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாக வணிகர் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

சங்கத்தின் கடன் வழங்கும் பகுதியிலிருந்து கடன் பெற்றவர்கள் இடம்பெயர்ந்து பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்குவதால் அவர்கள் பெற்ற கடனை செலுத்த வேண்டிய காலம் நீடிக்கப்பட்டதுடன்அதற்கான வட்டி வீதமும் குறைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சந்தாப் பணம் 50 ரூபாவிலிருந்து 25 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடம் ஜனவரி 21 ஆம் திகதி முதல் இவ் விடயம் நடைமுறைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-23)

# யாழ். நகர்ப்பகுதி திடீர்ச் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் வேளை திடீரென படைகள் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

இந்த வகையில், சில கடைகளுக்குச் சென்ற படையினர் அங்கு பணியாற்றும் ஊழியர் பதிவுப்பட்டியல்களை பார்வையிட்டதுடன்,

நகருக்குள் உலாவிய பொது மக்களின் அடையாள அட்டைகள், மற்றும் வாகன அனுமதிப் பத்திரங்களையும் பரிசோதனை நடத்தினர்.

(உ-12)

# வடமராட்சி க்கல்வி வலய ஆசிரியர்க்கு செயலமர்வு

(செம்பியன்பற்று)

வடமராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த அண்மையில் பலாலி கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இரண்டு வருட பயிற்சியை முடித்து வெளியேறிய சுமார் ஐம்பது ஆசிரியர்களிற்கு நெல்லியடி மகாவித்தியாலயத்தில்அமைந்துள்ள ஆசிரிய நிலையத்தில் பாடசாலை மட்டக் கணிப்பீடு சம்பந்தமான செயலமர்வு நடைபெற்றது.

இதில் வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வரட்ணம் செய்முறை தலைப்பிலும், வடமராட்சிக் கிழக்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் நந்தகுமார் ஒப்படைஎன்னும் தலைப்பிலும் கருத்தரங்கை நிகழ்த்தினர்.

இவர்களிற்கான அடுத்த செயலமர்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமைநெல்லியடி ஆசிரிய நிலையத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-42)

# தேவையான அரிசி கிடைக்குமா?

(அச்சுவேலி)

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் பொதுமக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில், குடும்பத்திற்கு 2 கிலோ வீதம் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, தனியார் கடைகளில் தேவைக்கு அதிகமாக அரிசியை பெற்றுக் கொள்ள முடிகின்ற போதும் கூட்டுறவுச் சங்கங்களில் இத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பது குறித்து பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

(உ-14)

## கிரிக்கெட்

# மத்தியஸ்தர்கள் பயிற்சி வகுப்பு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தினால் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வந்த புதிய கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் மேலும் இரு கிழமைகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

மெய்வன்மைப் பரீட்சை, உதைபந்தாட்டப்பரீட்சை ஆகிய பரீட்சைகள் நடைபெறுகின்றமையினாலேயே; இக் கிரிக்கெட் பயிற்சி வகுப்புக்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், மீண்டும் இப் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ம் திகதி தொடக்கம் வழமை போல் வகுப்புக்கள் நடைபெறும் எனவும் மத்தியஸ்தர் சங்க செயலாளர் எஸ். சிறீகாந்தன் தெரிவித்துள்ளார்.

[செ]

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை இடம்பெறவுள்ளது (செ)

# செய்தித் துளிகள்

## இன்று பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினது ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய கிளைக்குழு நிர்வாக உறுப்பினர்கள் பிரகடனப் படுத்தும் கூட்டமும் ஏற்கனவே அறிவித்தவாறு இன்றுகாலை 10 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பிரிவுகளினால் ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும், பதில் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் நடாத்துவதற்கான தடையுத்தரவை யாழ்நீதிமன்ற நீதவான் ஆர்.விக்கினராசா இரத்து செய்து கூட்டம் கூடுவதற்கு அனுமதி அளித்துள்ளார் என்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (வ)

## இன்று சந்திக்கவும்

1996,1997களில் பட்டம் முடித்து வெளியேறிய பட்டதாரிகளில் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றி இதுவரை நியமனம் கிடைக்காத வேலையற்ற பட்டதாரிகளை இன்றுகாலை 10மணிக்குபழம் றோட் கந்தர்மடத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் சங்க அலுவலகத்தில் ஒன்று கூடுமாறு சங்கத்தின் தலைவர் வே. மணிமாறன் கேட்டுள்ளார். (உ)

## தையல் மனையியல் கண்காட்சி

(மானிப்பாய்)

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சி நேற்றும், இன்றும் பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி மண்டபத்தில் மு. ப 10 மணி தொடக்கம் பி. ப 4 மணி வரை இடம்பெறுகின்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தா. வேதநாயகன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் க. இரவீந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் மு. பாலசிங்கம், கணக்காளர் திருமதி. கு. உதயகுமார் நிர்வாக உத்தியோகத்தர் க. செல்வராசா, பதவி நிலை உதவியாளர் க. ஞானகணேசன் சமூக சேவை உத்தியோகத்தர் அ. அமிர்தலிங்கம் கிராம அலுவலர் துரைராசா ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். (உ-120)

## வீழ்ந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் யாழ் நகரப் பகுதியில் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த தங்கத்துரை விநாயகமூர்த்தி (வயது - 45) என்பவரே சிகிச்சை பெற்று வருகிறார்.

## போலிநோட்டு தயாரித்தோர் கைது

[கொழும்பு]

போலியாக ரூபா நோட்டுக்களை அச்சடித்த பாதாள உலக கோஷ்டியைச் சேர்ந்த சிலர் இரகசியபொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பேராதனைப்பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்கள் இருவரை பலவந்தமாக பயன்படுத்தி 20 இலட்சம் ரூபா பெறுமதியான ஆயிரம் ரூபா போலி நோட்டுக்களை அச்சடித்த பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர்களே கம்பஹா பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-9)

## செயலாளராக தமிழர் நியமனம்

(கொழும்பு)

தொல்லை தவிர்ப்புக்குழுவுக்கு முதல் தடவையாக தமிழர் ஒருவர் செயலாளராக நியமிக்கப்படவிருப்பதாக நீதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சட்டத்தரணியான வி பொன்னம்பலம் என்பவரே தொல்லை தவிர்ப்புக் குழுவின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார்.

இவரது தலைமைத்துவத்தை அடுத்து தொல்லை தவிர்ப்புக்குழுவிற்கு தமிழ் மக்களின் முறைப்பாடுகள் அதிகமாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பான விடயங்களை தொல்லை தவிர்ப்புக்குழுவுக்குத் தெரியப்படுத்துவதற்காகவே தமிழர் ஒருவர் செயலாளராக நியமிக்கப்படவிருப்பதாக நீதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (வ)

## இணுவிலில் இனிமையான வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

இணுவில் மத்திய கல்லூரி தரம் 1 மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான கால்கோள் விழா அண்மையில் வெகு சிறப்பாக கல்லூரிச் சமூகத்தினரால் கொண்டாடப்பட்டது.

இந் நிகழ்வில் புதிய மாணவர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

கல்லூரி அதிபர் துரை எங்கரசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழையமாணவர் சங்க உறுப்பினர்கள், விளையாட்டு மைதான அபிவிருத்தி நிதிய உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புதிய கற்றல் செயற்பாட்டில் முக்கிய அம்சமான சிறுவர் விளையாட்டு முற்றம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அன்றைய தினமே திறந்து வைக்கப்பட்டது. இதனை சேவை மூப்பில் உள்ள த. செல்வரத்தினம் ஆசிரியர், ந.ச. யோகீஸ்வரன் ஆசிரியர் ஆகியோர் திறந்து வைத்தனர்.

தரம் 2 மாணவர்கள் புதிய மாணவர்களை வரவேற்று இனிப்புப் பொட்டலங்கள் வழங்கி விளையாட்டு முற்றத்திற்கு அழைத்துச் சென்று தம்மோடு அவர்களையும் இணைத்துக்கொண்டகாட்சி எல்லோரையும் வெகுவாக கவர்ந்தமை குறிப்பிடத்

# உயர் கல்விக் கூடங்களில் ஒழுக்கத்தை தேட முனைவதைவிட்டு சிறுவயதில் அதனை கற்கவேண்டும்

## துணைவேந்தர் அறிவுரை

(தென்மராட்சி)

கல்வியின் நோக்கம் ஒழுக்கம். இந்த ஒழுக்கத்தினை நாம் எமது மாணவச் செல்வங்களுக்கு சிறுவயதிலேயே ஏற்படுத்த வேண்டும். பல்கலைக் கழகம் வந்தால் பிறகு ஒழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள் என்று சொல்வதில் பயனில்லை. எனவே கல்வியின் நோக்கத்தினை வளப்படுத்தக் கூடிய வகையில் பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபாவின் மனித மேம்பாட்டுக் கல்வி அமைந்துள்ளது. இதனை எமது பிரதேசத்து மாணவர்களின் மனதில் பதியச் செய்வதற்கு இத்தகைய கண்காட்சி மிகவும் உதவும் என நம்புகின்றேன்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நேற்றைய தினம் காலை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் வடபிராந்திய பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா இணைப்புக்குழுவின் அனுசரணையுடன், இளைஞர் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட மனிதமேம்பாட்டுக்கான ஆன்மீகக் கண்காட்சியை வைபவரீதியாகத் திறந்துவைத்து உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

வடபிராந்திய இணைப்புக் குழுவின் தலைவர் ஸ்ரீ.வே. சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இக் கண்காட்சியின் போது, ஆசிய பிராந்திய கௌரவ ஆலோசகர் ஸ்ரீ. செ. சிவஞானம் கொடியை ஏற்றிவைத்தார். அறிமுகவுரையை பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) ஆற்றினார்.

துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை அங்கு தொடர்ந்து பேசுகையில்,

எமது நாட்டில் ஒழுக்கத்தைப்பேணச்செய்கின்ற அரிய பெரிய முயற்சியில் ஆன்மீகக் கல்வி முக்கிய பங்களிப்புச் செய்துவருகின்றது. நல்ல ஒழுக்கமுடையவர்களால் தான் நல்ல காரியங்களைச் சாதிக்கக் கூடியதாகவிருக்கும்.

இந்தத்துறையில் பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபாவின் மனிதமேம்பாட்டுக் கல்வியை இக்கண்காட்சி மூலம் பிள்ளைகளும் பெரியவர்களும் புரியும் வாய்ப்பை ஏற்படுத்தியமை பாராட்டுக்குரியதாகும் என்றார். (உ-77)

## யாழ். மாநகரசபை நிர்வாகச் சிக்கல்கள் சீர்ப்படுத்த தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சுமார் 17 வருடகாலங்களாக யாழ். மாநகர சபை செயலிழந்த காரணத்தினால் ஏற்பட்ட நிர்வாகச் சிக்கல்களைச் சீர்ப்படுத்தி மீளவும் கட்டுக்கோப்பான முறையில் வழி நடத்தும் வகையிலான தீர்மானங்கள் பல கடும் விவாதங்களின் மத்தியில் நேற்று முன்தினம் மாநகர முதல்வர் என். ரவிராஜ் தலைமையில் நடந்த மாநகரசபை மாதாந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

இந்த வகையில், யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவின் சுகாதார வைத்திய அதிகாரியின் கடமைகளும் அம்புலன்ஸ் வண்டியின் பாவனைகளும் தொடர்பான பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி உட்பட மாநகரசபை உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், யாழ். மாநகர சபைக்கு மூன்று சுகாதார வைத்திய அதிகாரிகள் இருக்க வேண்டிய சூழ்நிலையில் ஒரேயொரு வைத்திய அதிகாரி மட்டுமே உள்ளதால்,

வேலைப்பளுவைக் குறைக்கும் வகையில் சுகாதார ஊழியர்கள் யாழ். மாநகரசபை ஆணையாளரின் கீழ் சுகாதாரப் பிரிவு பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

அத்துடன்வைத்திய சேவைகளுக்கான பொறுப்பு யாழ். மாநகரசபை ஆணையாளரின் கீழ், சுகாதார வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுகாதார வைத்திய அதிகாரியின் பொறுப்புகள் வரையறுக்கப்பட்டு கடமைகள் பட்டியலிடப்பட்டு அம்புலன்ஸ் வண்டியின் பாவனைகளும் பட்டியலிடப்பட்டுள்ளன. (உ-12)

## கல்முனையை, பிரதேச செயலகமாக தரம் உயர்த்தக் கோரி மக்கள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

கல்முனை தமிழ்உபபிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாக தரம் உயர்த்துமாறு கோரி தொடர்ந்தும்உண்ணாவிரதப் போராட்டத்தில் அப்பிரதேச மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

கிராம அபிவிருத்தி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த உண்ணாவிரதப் போராட்டம் கல்முனை உப பிரதேச செயலகம் முன்பாக நடைபெற்று வருகிறது இதில் பெரு எண்ணிக்கையில் மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இப்போரட்டத்திற்கு சாதகமான பதில் கிடைக்காதுவிடின் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாகஒன்றிய உப தலைவர் இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார். (உ-5)

## நிவாரணம்தாமதம் தரமற்ற அரிசியை எடுக்க சங்கங்கள் பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுவருவதாக பல நோக்குக்கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புனர்வாழ்வுப் பகுதிக் களஞ்சியங்களில்இருந்து நிவாரணத்துக் குரிய அரிசியை பெற்றுக் கொள்வதில் சங்கங்கள் பின்னடிப்பதேநிவாரணக் கொடுப்பனவு வழங்காமைக்கான காரணமென்றுதெரிவிக்கப்படுகிறது.

யாழ்மாவட்டத்தில் உள்ள 23 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 4 சங்கங்கள்மட்டுமே அரிசியைப்பெறச் சென்றதாகவும் ஏனையவைகள் அரிசி தரமற்றது எனக் காரணம் காட்டி எடுக்காது திரும்பிச் சென்றதாகவும் சங்கவட்டாரங்களில் இருந்து அறியவந்துள்ளது.

கடந்த ஒருமாதமாக நிவாரணம் பெறாதஇடம்பெயர்ந்த33 மக்களை கால தாமதம் வாட்டுவதாகவும் பிரதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (ம-)

## வணிகர் கழகத்தீர்மானம் எம். பி. கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் வணிகர் கழகதலைமைச்செயலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது, பின்வரும் தீர்மானங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்திற்கு கொண்டு செல்வதெனவர்த்தகர்சங்கத்தலைவர் தெரிவித்தார்.

★ கப்பற்சேவைக் கட்டணத்தை அமெரிக்க டொலரில் இருந்து மாற்றி இலங்கை ரூபாவில் அறவிடப்படவேண்டும்.

★ தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் அரசாங்கத்துடனும் கலந்துரையாடி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் வழித்துணையுடனான தரை வழிப்போக்குவரத்திற்கு நடவடிக்கை எடுத்தல்.

★ இயலாத பட்சத்தில் செஞ்சிலுவைச் சங்க வழித்துணையுடன் வணிகர் கப்பல் சேவையாற்றுதல்.

பொருட்கள் பண்டங்கள் மீதான வரி, பாதுகாப்பு வரி என்பன தவிர்க்கப்பட்டு கப்பற் கட்டணம் மட்டும் அறவிடுதல்.

★ பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்கள் இறக்கும் பணியினை வணிகர் கழகத்திடம் ஒப்படைத்தல் என்பனவாகும். (உ-12)

## 13 தமிழர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது சந்தேகத்திற்கிடமான 13 தமிழர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்..

இவர்கள் அனைவரும்விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும். கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி அனுராதா மகிந்தசிறி தெரிவித்துள்ளார்.

## தொடர்பு கொள்க

கீழே பெயர் குறிப்பிடப்பட்டவரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றது.

கந்தையா இரத்தினம் பழைய புகையிரத நிலையம் அருகில் மீசாலை, கொடிகா

## இன்று ஒரு தகவல்

### இரக்கம் என்பதன் பெறுமதி

உண்ணவும் உறங்கவும் பிறந்தவை மிருகங்கள். எண்ணவும் இரங்கவும் பிறந்தவன் மனிதன் என்று ஒருபெரியவர் சொன்னார். இரக்கப்படத் தெரியவில்லையென்றால் அவன் என்ன மனிதன்! எனக்குத் தெரிந்த பேச்சாளர் ஒருவர் இருக்கின்றார். அவர் எந்த ஊருக்குப் பேசப்போனாலும் இருபத்தைந்து ரூபாவுக்கு மேல் யாரும் கொடுக்கிறதில்லை.

கூட்டம் நடத்துகிறவர்களுக்குக் கொஞ்சம் கூட இரக்கமே இல்லை ஐயா என்று குறைபட்டுக்கொள்வார். சமீபத்தில் அவர் ஒருகூட்டத்திற்குப் போயிருந்தார். வழக்கம் போல் இருபத்தைந்து ரூபா தான் கொடுத்திருக்கிறார்கள். அதை வாங்கிக் கொண்டு முணு முணுத்துக் கொண்டே வந்து கொண்டிருந்தாராம். கொஞ்சத் தூரம் வந்திருப்பார், கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர் கையை நீட்டிக்கூப்பிட்டுக் கொண்டு ஓடி வந்திருக்கிறார்.

இவருக்குக் கொஞ்சம் ஆறுதல் பரவாயில்லை இப்பவாவது அவர்களுக்குப் புத்தி வந்திருக்கிறதே! இன்னும் ஒரு இருபத்தைந்து ரூபா கொடுக்கிறதற்காகத் தான்வருகிறார் போலிருக்கிறதுஎன்று நினைத்தார். அவரிடம் ஓடிவந்தவர் ''ஐயா கைதவறுதலாக உங்களிடம் பத்து ரூபாஅதிகமாகக் கொடுத்து விட்டேன். அதை வாங்கிக் கொண்டு போவதற்காகத் தான் ஓடிவருகிறேன் என்றாராம். இவர்கள்சொர்க்கத்துக்கோ- நரகத்துக்கோ போனால் என்ன செய்வார்கள் என்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# பேருந்து சேவையை விஸ்தரிக்க வடமராட்சி கிழக்கு மக்கள் கோரிக்கை

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு அம்பன் வரை இடம்பெறும் பேருந்து சேவையை, மணற்காடு, குடத்தனை பிரதேசங்களிற்கும் விஸ்தரிக்க வேண்டும் எனசம்பந்தப்பட்ட பகுதியில் வசித்து வரும் பொது மக்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பேருந்து சேவை தமதுபகுதியில் இடம் பெறாமையால் போக்கு வரத்தில் தாம் அனுபவிக்கும் இன்னல்கள் குறித்து வேறிடங்களில் தொழில் புரியும் அரச உத்தியோகத்தர்கள் போக்குவரத்து சபைக்கு முறையிட்டுள்ளனர்.

பேருந்து சேவை இடம் பெறாமையினால் மணற்காடு, குடத்தனைப் பகுதி மக்கள் 4 மைல் தூரம் நடந்து சென்று பயணங்களை மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம், மேற்படி பகுதிகள் வரையான பேருந்து சேவை முன்னைய காலங்களில் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-42)

## பொ. ஜ. ஐ. மு. மத்திய குழு கூட்டம் திங்களன்று

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்திய குழுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தலைமை தாங்குவார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நாணயப் பெறுமதி இறக்கம் மற்றும் விடுதலைப் புலிகள் இரண்டாவதுதடவை அறிவித்துள்ள ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் குறித்து ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

## பெயர் பொறிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யா/ வீரசிங்கம் மண்டபம் புனரமைப்புச் செய்யப்பட்டு அம்மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை என மும்மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள போதிலும் 'வீரசிங்கம் மண்டபம்' என்ற பழைய பெயர் எங்கும் பொறிக்கப்படவில்லை.

நேற்று முன்தினம் யாழ். மாநகரசபையின் பொதுக் கூட்டம் இடம்பெற்றவேளை மாநகரசபை உறுப்பினர் தவநாதன் இதுவிடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவிடயம், மாநகரசபையின் வழிநடத்தலுக்கு உட்படாததாயினும், பொதுவிடயமாகக் கருதி சுட்டிக்காட்டுவதாக அவர் குறிப்பிட்டதையடுத்து,

மாநகரசபை முதல்வர் என். ரவிராஜ் உட்பட சமுகமளித்திருந்த மாநகரசபை உறுப்பினர்கள் அனைவரும் இவ் விடயத்தை ஏற்றுக் கொண்டு உரியவர்களிடம் எடுத்துக்கூறி அதற்கான நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது. (உ-12)

## படையினர் விலகிச்சென்ற இடங்களில் பொதுமக்கள் நாட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் இருபாலைப் பகுதியில் படையினர் நிலை கொண்டு பின் விலகிச் சென்ற இடங்களில் விறகு வியாபாரிகளின் கவனம் திரும்பியுள்ளது.

இப் பகுதிகளில் உள்ள இராணுவ நிலைகளில் காணப்பட்டபனம் குற்றிகள் மற்றும் மரப்பலகைகளை எடுத்துச் சென்று நல்ல விலைக்கு இவர்கள் விற்று வருகின்றனர்.

அத்துடன். அப்பகுதியில் காணப்படும் முட்கம்பிகள் மற்றும் கொங்கிறீற் கற்களை எடுத்துச் செல்வதிலும் பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதேவேளை, காவலரண் அமைக்கப்பட்ட இடங்களின் உரிமையாளர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு அப்பகுதியில் இருந்துபொருட்களை மீட்டுச் செல்வதும் குறிப்பிடத்தக்கது. (உ-79)

### ஞானச் சுடர் மாதவெளியீடு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச் சுடர் தை மாத இதழ் இன்று மு. ப. 10. 00 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர். ஆ. சிவநாதன் வெளியீட்டுரையையும், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ச. விநாயகமூர்த்தி மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர் (செ)

## ரஷ்யா உறவு வலுக்கிறது

[கொழும்பு]

அரசியல் மற்றும் இராணுவ தொழில் நுட்பம் உட்பட பல தரப்பட்ட விடயங்களில் ரஷ்யாவுக்கும் இலங்கைக்குமான இருதரப்பு உறவு பலமடைந்து வருகிறதென ரஷ்ய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அலெக்சாண்டர் ஜகவின்கா தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தற்பொழுது ரஷ்யாவில் தங்கியிருக்கும் இவ் வேளையில் இரு நாட்டு உறவும் வலுப்பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## கோப்பாயில் இயங்கும் கசநோய் ஆஸ்பத்திரிக்கு சிங்களத்தில் கடிதங்கள் தமிழ் ஊழியர் திண்டாட்டம்

(ஆவரங்கால்)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் இயங்கிவரும், மயிலிட்டி கசநோய் மருத்துவமனைக், கசநோய் தலைமைச் செயலகமான வெலிசறையில் இருந்து அனுப்பிவைக்கப்படும் முக்கிய கடிதங்கள் சிங்கள மொழியில் எழுதப்பட்டு அனுப்பப்படுவதாக தெரியவந்துள்ளது.

இதனால் தலைமையகத்தில் இருந்து அனுப்பப்படும் முக்கிய அறிவித்தல்களை நடைமுறைப்படுத்துவதில் வீண் காலதாமதம் ஏற்படுவதுடன் பெரும் சங்கடங்கள் எதிர்நோக்கப்படுவதாக வைத்தியசாலைப் பணியாளர்களினால் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமிழ் அரசகருமமொழியாக்கப்பட்ட நிலையிலும், சம்பந்தப்பட்ட தரப்பினரின் இத் திட்டமிட்ட புறக்கணிப்பு குறித்து சகலராலும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-57)

## பணியாளர் நலன் கருதி மேல் நீதிமன்றம் வரை பேருந்து சேவை

(ஈச்சமோட்டை)

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல், யாழ். மாவட்ட மேல் நீதிமன்றம் இயங்கவுள்ளதால், அங்கு பணியாற்றும் ஊழியர்களின் நலன் கருதி கச்சேரி வரை இடம்பெற்று வந்த பேருந்து சேவையை மேற்படி நீதிமன்றம் வரை ஏற்படுத்துமாறு யாழ்.மாநகரபிதா ரவிராஜ் இடம் யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற பதிவாளர் அண்ணா ராஜேந்திரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு யாழ்.மாநகரபிதா இது சம்பந்தமாக வடபிராந்திய போக்குவரத்து சபை பொதுமுகாமையாளர் சொக்கலிங்கத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு நீதிமன்றம் வரை பஸ் சேவை நடத்தினால் மேல் நீதிமன்றில் கடமையாற்றும் ஊழியர் மட்டுமன்றி அங்கு வரும் பொதுமக்களுக்கும் பெரும் பயனளிக்கும் என மேல் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (உ-59)

## புங்குடுதீவில் கொல்களம் அமைப்பு மக்கள் பலத்த எதிர்ப்பு

(சங்கானை)

புங்குடுதீவுப் பகுதியில் இறைச்சிக்காக மாடு வெட்டுவதற்கான கொல்களம் அமைப்பதற்கு இப் பகுதி மக்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

வேலணைப் பிரதேச சபையினரால், மாடு வெட்டப்படுவதற்கென கொல்களம் அமைப்பதற்கு காணிகுத் தகைக்கு வழங்கப்படவுள்ளது.

இதனை அறிந்து இப்பகுதி மக்கள் இதுவரை காலமும் இப்படி இறைச்சிக்காக மாடு வெட்டப்படுவதில்லை என கவலை தெரிவித்துள்ளனர். [செ-ப-16]

## செய்தித் துளிகள்

### இன்று கூட்டம்

(ஆவரங்கால்)

இளைஞர் சேவைகள் மன்ற அச்சுவேலிப் பிரிவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று அச்சுவேலி மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் எஸ். கோகுலன் தலைமையில் இடம்பெறும். (உ-57)

### சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செருடாவில் கலை இலக்கிய சாகரத்தின் ''சக்தி'' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று பி. ப. 2 மணியவில் பொன்னொளி இ. ஐ. வாசிகசாலை முன்றலில் தலைவர் கி. நவநீதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில், சஞ்சிகை வெளியீட்டுரையை கவிஞர் சோ. பத்மநாதன் நிகழ்த்துவார்.

ஆய்வுரையை யா/பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா ஆற்றுவார்.

சஞ்சிகை வெயீட்டை அடுத்து, சூழலும் சொற்போர், நாட்டிய சங்கமம், இசைநாடகம் ஆகியன இடம் பெறும். (உ)

### கல்யாண மண்டபம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் மனோன்மணி அம்பாள் ஆலய முன்றலில் புதிதாக அமைக்கப்பட்ட மனோன்மணி கல்யாண மண்டபத் திறப்பு விழா இன்று காலை 8. 30 மணியளவில் இடம் பெறவுள்ளது. (உ-103)

### குறைந்தளவு பாடப் புத்தகங்கள்

(மண்டைதீவு)

தீவக கல்வி வலயத்திற்கு தேவையான இலவசப் பாடப் புத்தகங்கள் மிகக் குறைந்தளவே வழங்கப்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது.

ஆசிரியர் பற்றாக் குறை நிலவி வருகின்ற இவ்வேளையில் பாடப் புத்தகங்களும் மிகக் குறைவாகக் கிடைத்திருப்பதானது மாணவர் கல்விச் செயற்பாடுகளில் மேலும் பின்னடைவினை ஏற்படுத்துமென தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். (உ-11)

### பதக்கம் வென்ற மாணவர்கள்

[யாழ்ப்பாணம்]

யா/ ஏழாலை மகாவித்தியாலய மாணவர்கள் மூவர் அகில இலங்கைரீதியில் இடம்பெற்ற போட்டிகளில் பதக்கங்களைப் பெற்று பாடசாலைக்கு புகழைத்தேடிக் கொடுத்துள்ளனர்.

புத்தாயிரமாம் ஆண்டு இடம்பெற்ற 29 ஆவது ஓவிய கண்காட்சிப் போட்டியில் கருணாமூர்த்தி அன்பழகன், தில்லை நடராசா கிசாந் ஆகிய இருமாணவர்களும் பதக்கங்களை வென்றுள்ளனர்.

''முதிர்விலுதவி'' 2000 ஆம் ஆண்டு தமிழ் மொழி கட்டுரைப் போட்டியில் கதிரமலை சோபனா கனிஷ்ட பிரிவில் இரண்டாவது பரிசைப் பெற்று பதக்கம் வென்றுள்ளார். (உ)

### குழந்தை மரணம்

(மந்திகை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் முட்டு மற்றும் இழுப்புக்காரணமாக அனுமதிக்கப்பட்ட குழந்தை ஒன்று நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளது.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த இரவீந்திரன் சாருதா (வயது $1\frac{1}{2}$) என்ற குழந்தையே மரணமானது. (ந-5-23)

### தொண்டர் ஆசிரியர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் தொண்டர் ஆசிரியர் விபர விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாகவும், பரப்பப்பட்டு வரும் ஏனைய வீண் தகவல்களையும் நம்பி குழப்பம் அடைய வேண்டாமென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வி.கே. ஜெகனினால் தொண்டர் ஆசிரியர் சங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில்தொண்டர் ஆசிரியர்களாக கடமை புரிந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட தகைமையுடையோர் 400 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வினால் உறுதிமொழி வழங்கப்பட்டமையையும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகன் தொண்டர் ஆசிரியர்சங்கத்திற்குமீண்டும் ஞாபக மூட்டியுள்ளார்.

# நாட்டின் சகல பிரச்சினைகளையும் விரைவில் தீர்த்து வைப்பேன்

## அதிபர் அறாயோ உரை

(மணிலா)

நாட்டில் எண்ணற்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப் போவதாகவும் மக்களைப் பொறுமையோடு இருக்கும்படியும் பிலிப்பைன்ஸ் அதிபர் அறாயோ தெரிவித்தார்.

புதிய அமைச்சர்களுக்கு சத்தியப் பிரமாணம் செய்து வைத்து விட்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒருதொகுதி மந்திரிகள் பதவியேற்று விட்டார்கள் என்றும் சிலர் பதவியேற்க இருக்கிறார்களென்றும் தெரிவித்தார்.

சென்றவாரம் அதிபர்பதவியேற்ற அறாயோ நாட்டில் சீரான பணிகளை முடுக்கி விட்டிருக்கிறார்.

இதன்முதற்படியாக அரச அதிகாரிகளை சொகுசுக்கார்களைத் தவிர்க்கும்படி உத்தர விட்டிருக்கிறார்

இதேவேளை, அரசுக்கு சொந்தமான சொகுசு வாகனங்கள் எல்லாவற்றையும் ஏலத்தில் விடும்படி ஆணை பிறப்பித்திருக்கிறார்.

இதற்கிடையில் அதிபர் அறாயோவின் ஆதரவாளர்கள் மந்திரிகளைத் தெரிவதற்கு தெரிவுக்குழு ஒன்றை அமைத்திருந்தனர் ஆனால் அந்தக்குழுவின் சிபார்சைச் சரிவர ஏற்கவில்லையென்றும் மந்திரிகள் தெரிவில் தகுதியானவர்கள் இடம்பெறவில்லையென்றும் அதிபரின் ஆதரவாளர்களும் அரசியல் தலைவர்களும் கண்டனங்கள் தெரிவித்துள்ளனர். (து)

## இந்தோனேஷிய

# அதிபரைப் பதவி விலகக் கோரி பல்கலைமாணவர்கள் ஆர்ப்பாட்டம்

இந்தோனேஷிய அதிபர் அப்துல்ரகுமான் வாஹிடடை பதவி விலகும்படி கோரி நூற்றுக் கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் வீதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஜகார்த்தா, தாடா போன்ற நகரங்களில் ஏழு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

அதிபர் அப்துல்ரகுமான் வாஹிட் புறூணே சுல்தான் கொடுத்த இரண்டரை மில்லியன்டொலரையும் நாட்டின் பிற நிதியத்திலிருந்து ஒன்பது மில்லியன் டொலரையும் மோசடி செய்தார் என்றும் ஆர்ப்பாட்டக்காரர் குற்றஞ்சாட்டினர்.

அதிபர் வாஹிட்டின் மாளிகைக்குள் ஆர்ப்பாட்டக்காரர் இருநூறு பேர் நாழைந்து பதவியை விலகும்படியான கோரிக்கையைக்கையளித்துள்ளனர்.

ஏற்கனவே பாராளுமன்ற அங்கத்தவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க வாஹிட் மறுத்திருப்பதும் தான் எதற்கும் தயார் என்று வாஹிட் சவால் விட்டதும் நினைக்கக் கூடியது. (து)

## அமெ. ஜனாதிபதி தேர்தலில்

# தோல்வியடைந்த அல்கோர் பேராசிரியர் பதவி ஏற்பார்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த முன்னாள் உப ஜனாதிபதி அல்கோர் நியூயோர்க்கிலுள்ள பல்கலைக்கழகமொன்றில் பத்திரிகைத்துறை பேராசிரியராக கடமையாற்றவுள்ளார்.

அல்கோர் 1976 இல் ஜனப் பிரதிநிதிகள் சபையின் அங்கத்தவராகத் தெரிவாகுமுன் பத்திரிகையொன்றில் புலனாய்வுத்துறைச் செய்தியாளராகப் பணிபுரிந்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்குச் சில நாட்கள் முன்னர் 'சமநிலையில் உள்ள பூமி' என்ற சூழலியல் நூலொன்றையும் எழுதி வெளியிட்டுள்ளார். உ

## செச்சினியாவில்

# நிலை கொண்டுள்ள ரஷ்ய படைகள் விரைவில் வாபஸ்

(மொஸ்கோ)

செச்சினியாவில் இருந்து ரஷ்ய இராணுவத்தின் முதல் தொகுதியினர் அடுத்த மாதம் முதல் வாபஸ் பெறப்படுவர் என ரஷ்ய இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இருப்பினும் அங்கு நிலைகொண்டுள்ள ரஷ்ய துருப்பினர்க்கு இது தொடர்பான தகவல் எதுவும்அறிவிக்கப்படவில்லையென தெரியவந்துள்ளது.

இதேசமயம், செச்சினியாவில் உள்ள பல்லாயிரக்கணக்கான ரஷ்யப் படையினரை 40 ஆயிரமாக குறைக்கும் நோக்குடனேயே வாபஸ் பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாய் தெரிய வந்துள்து. (உ)

## காஷ்மீர் தலைவர்கள்

# பாக். செல்ல இந்தியா அனுமதிக்க வேண்டும்

(இஸ்லாமாபாத்)

சமாதானப் பேச்சுவார்த்தைக்காக காஷ்மீர் தலைவர்களை இஸ்லாமாபாத்துக்கு விஜயம் செய்யஇந்தியா அனுமதிக்காதவரை சாதகமான முயற்சிகள் வெற்றியளிக்காதெனபாகிஸ்தான்வெளியுறவு அமைச்சர் அப்துல் சத்தார் கூறியுள்ளார்.

இந்தியா அதன் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைநீடித்ததையடுத்து காஷ்மீர் கெரில்லாக்களுக்கு பாகிஸ்தான் வழங்கும் ஆதரவை நிறுத்த வேண்டும் என்றும் இந்தியா கோரிவருகின்றது.

இது குறித்து முதல் தடவையாக கருத்துக்கூறிய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் காஷ்மீர் தலைவர்களுக்கு பாகிஸ்தான் செல்லஇந்தியா அனுமதி வழங்கும் வரைசமாதானப் பேச்சு வார்த்தைகள் முடக்கப்பட்டே இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார் உ

## நைஜீரிய

# இளம் பெண்ணுக்கு 100 கசையடி தண்டனை

(ஒட்டாவா)

வடநைஜீரியாவில் 17 வயதான இளம தாய் ஒருத்திக்கு இஸ்லாமிய நீதிமன்றம் 100 கசையடி தண்டனை விதித்துள்ளது.

தகாத நடத்தை கொண்டவர் என இனம் காணப்பட்டதன் பேரிலேயே இத்தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

தனது தண்டனையை எதிர்த்து பரியா மகாஸு என்ற மேற்படி பெண், மேன்முறையீடு செய்துள்ளார்.

இதேவேளை இவ் விடயத்தினை கனடா அரசு வன்மையாகக் கண்டித்துள்ளது. (உ)

# மலேசிய அமைச்சர் விளக்கம் கேட்டார்

(கோலாலம்பூர்)

மலேசிய வெளிவிவகார அமைச்சர் கோலாலம்பூரிலுள்ள சிங்கப்பூர் தூதுவரை அழைத்து விளக்கங் கோரியுள்ளார்.

சிங்கப்பூர் அமைச்சர் ஒருவர் அங்கு வாழும் மலேசியர்கள், மலேசிய மலேசியரிலும் பார்க்க மேம்பட்டவர்களாகவும் வசதி படைத்தவர்களாகவும் வாழ்கிறார்கள் என்று பேசினார் என்பதற்காக சிங்கப்பூர் தூதுவரை அழைத்தார்.

மலேசியர்களைப் புண்படுத்தியதாக அமைந்தது என்று அமைச்சர் கூறியிருக்கிறார். (து)

## விடுதலைப் புலிகளின்

# யுத்த நிறுத்தஅறிவிப்புக்கு பழ.நெடுமாறன் வரவேற்பு

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தத்தை நீடித்திருப்பதை தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ. நெடுமாறன் வரவேற்றுள்ளார்.

மதுரையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், இந்தியாவில் காஷ்மீர் அரசு அறிவித்துள்ள போர் நிறுத்தத்தை வரவேற்பவர்கள் தமிழீழத்தில் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள போர் நிறுத்தத்தையும் வரவேற்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

தேவை ஏற்படின் இது தொடர்பாக மத்திய உள்த்துறை அமைச்சர் எல்.கே அத்வாணியையும் தாம் சந்தித்துப் பேசுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து)

## புலிகளின் ஆதரவு

# சமாதான முயற்சிக்கு கிடைத்த வெற்றி

### ஒஸ்லோ வட்டாரங்கள் நம்பிக்கை

(ஒஸ்லோ)

நோர்வேயின் சமாதான முயற்சிக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒத்துழைக்க விருப்பம் தெரிவித்திருப்பதினால், நோர்வே எடுத்து வரும் சமாதன முயற்சி வெற்றி அளிக்கும் என ''ஒஸ்லோ'' வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இரண்டாவது தடவையாக யுத்த நிறுத்தம் செய்யாது விட்டிருந்தால் நாட்டின் நிலைமை வேறுவிதமாக அமைந்திருக்கும். ஆனால் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்பதில் நம்பிக்கை கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### பாகிஸ்தான் நிலநடுக்கத்தில் பத்துப்பேர் பலி

(கராச்சி)

நேற்று முன்தினம் குஜராத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டோரைப் பலிவாங்கிய நிலநடுக்கம் பாகிஸ்தானிலும் பத்துப் பேரைப் பலி வாங்கியது.

காட்டுப்பகுதியை அண்டியுள்ள இந்து மாகாணத்தில் நிலநடுக்கத்தால் பல கட்டடங்கள் இடிந்து விழ்ந்ததாகவும்சேதங்களுக்கு மத்தியில் பத்துப்பேர் கொல்லப்பட்டனர், நூறுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கராச்சிப்பகுதி நிலநடுக்கம் றிச்அளவுகோலில் 6 5 புள்ளி காட்டியுள்ளது என்று இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# ஒருவர் தானமாகவழங்கிய கல்லீரல்,இருவருக்கு பயன்

(லண்டன்)

ஒருவர் தானமாக கொடுத்த கல்லீரல் 2 பேருக்கு பொருத்தப்பட்ட சம்பவம் இங்கிலாந்தில் உள்ள சயின்ட ஜேம்ஸ் மருத்துவ மனையில் இடம்பெற்றுள்ளது.

தானமாக கிடைத்த கல்லீரலின் முக்கால் பகுதி ஜோர்ச் கொய்லி (வயது 38) என்பவருக்கும் மீதவுமுள்ள கல்லீரல் 9 மாத பெண் குழந்தை அம்மிக்கும் பொருத்தப்பட்டது.

இங்கிலாந்தில் 200 பேர் கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சைக்காக காத்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கணவனை

# ஒரே அடியில் கொன்ற எகிப்திய நாட்டுக் காதகி

[கெய்ரோ]

ஒரே அடியில் கணவனை அடித்து மனைவி கொலை செய்த சம்பவம் ஒன்று எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் நடைபெற்றுள்ளது.

தனது 66 வயது கணவனுடன் ஏற்பட்ட வாய்ச் சண்டையை அடுத்து கோபங்கொண்ட மனைவி கணவனது முகத்தில் பலமாகக்குத்தியதன் மூலம் கணவன் கொலையுண்டார். தனது கணவர் இயற்கைமரணமெய்தினார் என முதலில் பொய் கூறிய மனைவி விசாரணைகளின் பின்பு உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளார். (தி-9)

### கிராம அபி.சங்க பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம்2001ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் இன்று பி ப 3 00 மணிக்கு, கொட்டடி சீனிவாசகம் வீதியில் அமைந்துள்ள மேற்படி சங்கக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் நா.கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு யாழ். பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். [செ

இன்மையின் இன்னாது
உடைமை முறை செய்யா
மன்னவன் கோற்கீழ்ப்படின்
- குறள் -

# வலம்புரி

## நீதியுடன் வியாபாரம் செய்க!

நாணயப் பெறுமதி இறக்கம் – பொதுவிலை மட்ட உயர்வு - இறக்குமதி நிறுத்தம் எல்லாம் பொருட்களின் விலையை ஏற்றி விடுவதில் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் வடபுலத்து மக்களின் வாழ்க்கை நிலை பெரிதும் மோசமடைந்துள்ளது. இந் நிலையில் யாழ். வர்த்தகர்களும் பொருட்களை பதுக்கி – ஏற்கனவே கொண்டு வந்த பொருட்களுக்கும் தற்போது அதிகரிக்கவுள்ள கப்பல் கட்டணங்களை உள்ளடக்கி விற்பனை செய்வது, செய்ய முனைவது துன்பத்தில் தவிக்கும் ஏழைகளுக்குச் செய்யும் பெரும் துரோகமாகவே இருக்கும்.

காலா காலமாக யாழ். வர்த்தகர்களில் அநேகர் பதுக்கல் – கொடூர விலையேற்றம் என தமது வர்த்தக நீதி தவறி செயற்பட்டு வந்துள்ளனர். எனினும் அவர்களிலும் சிலர் தர்மம் காத்து - இறை நீதியை மதித்து செயற்பட்டுள்ளனர் என்பதும் மறுக்க முடியாத உண்மை இத்தகைய வர்த்தகர்கள் ஏழைகளுக்கு உண்டி கொடுத்த - உயிர்காத்த புண்ணியத்தைச் செய்தவர்களாகவே கருதப்படுவர். மாறாக நீதி தவறி கண் மண் தெரியாது விலையேற்றி - பதுக்கி பணம் சம்பாதித்தவர்கள் உண்மையில் பணத்தையல்ல ஒரு நேர உணவிற்கே வழியின்றி உயிர் நீத்த ஏழைகளின் மரணப் பாவத்தையே சேர்த்து வைத்துள்ளார்கள்.

பரம பிதா காட்டிய பாதை

# தியாகத்தினால் உலகிற்கு ஒளியேற்றிய இறைமகனின் அழைப்பின் வழி வாழ்வோம்



ஜே. கே. பயஸ்
(பலாலி ஆசிரிய கலாசாலை)

இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவனிடமிருந்து அழைப்பு விடுக்கப்படுகின்றது: இவ்வாறான அழைப்புகள் பல விதம். அவை ஒவ்வொன்றும் ஒருவிதம். அந்த அழைப்பை நாம் எவ்வாறு உணர்ந்து கொள்கின்றோம் என்பதிலேயே மனித வாழ்வின் வெற்றி தங்கியுள்ளது. அரசாட்சி செய்வோர் ஆட்சிப் பீடத்தில் இறைவனின் பிரதிநிதியாக செயற்பட வேண்டும். ஆசிரியர் அறிவுக் கண்ணைத் திறக்கவேண்டும். நீதிபதி நடுநிலை தவறாது தீர்ப்பு வழங்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகளைப் பேணி வளர்க்க வேண்டும். கற்றோர் கல்லாதோரிற்கு உதவ வேண்டும். குருக்கள் ஞானாவழியை காட்டவேண்டும். பிள்ளைகள் பெற்றோர், பெரியோர், ஆசானை மதித்து வாழ வேண்டும். வியாபாரிகள் நியாய விலை பேண வேண்டும் நிர்வாகிகள் பாரபட்சமின்றி நடக்கவேண்டும். இவ்வாறு தம் அழைப்புக்கு ஏற்ப வாழவேண்டும்.

### அழைப்பை உணர்தல்

ஆனால் இன்று நடப்பவை மேற் கூறப்பட்டவற்றிற்கு முற்றிலும் முரணானவையாகவே காணப்படுகின்றன. ஆட்சியாளர் மக்கள் மத்தியில் இனமொழி ரீதியான பாகுபாடு காட்டுகின்றனர். பிள்ளைகளைப் பெற்றெடுத்தல் மட்டும் தம்கடமை என பெற்றோர் வாழ்கின்றனர். லஞ்சத்தையும் ஊழலையும் வளர்க்குமிடமாக நிர்வாக நிலையங்கள் மாறிவிட்டன. அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சலென பிள்ளைகள் எண்ணுகின்றனர். வியாபார நிலையங்கள் மக்களை பொருளாதார ரீதியில் வதைக்கும் வதைகூடங்களாக மாறிவிட்டன அறிவுக் கண்ணைத் திறப்பதற்கு அடிப்படைத் தகுதி பணமாகிவிட்டது. இந்த நிலையில் அழைப்பைஉணர்ந்தவர் யார் என்பது கேள்விக் குறியே! அதற்கு வழிகாட்டுபவர் யாரையா.?

### அன்பும் தியாகமும்

இவை அனைத்திற்கும். முடிவுகட்டி அழைப்பை உணர வைப்பது அன்பு ஒன்றே.

'நான் மானிட மொழிகளிலும் வானதூதரின் மொழிகளிலும் பேசினாலும் அன்பு எனக்கு இல்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன்.

அன்பு நன்மை செய்யும். அன்பு இழிவானதைத் செய்யாது. தன்னலம் நாடாது. தீங்கு நினையாது. அன்பு தீவினையில் மகிழ்வுறாது.'

(1 கொரி. 13)

அன்பினால் விளைவது தியாகமாகும். அது தன்னலம் நாடாதது. மற்றவருக்காக தன்னையே தருவது அன்பு. பிறறிற்கு ஒளி கொடுப்பதற்காக தன்னையே உருக்கும் மெழுகுதிரியின் தியாகம் உண்மையானது. உலகக் கொடுமைகளை எல்லாம் பொறுமையோடு தாங்கும் பூமியின் தியாகம் மேலானது.

இது போன்று அன்பின் வழியில் அழைப்பினை ஏற்றுவாழ முற்படும் போது பல இடையூறுகள் துன்பங்கள் துயரங்கள் இகழ்ச்சிகள் ஏற்படத்தான்செய்யும். அவையனைத்தையும் அன்பின் துணை கொண்டு தாங்கி பிறர் வாழ எம்மைத் தியாகம் செய்ய வேண்டும். சமூக கொடுமைகளையும் அநீதிகளையும் அடிமை விலங்கையும் உடைத்தெறிய உண்மைத் தியாகம் வேண்டும். இறை பணியில் வரும் இடர்களைக் கடக்க தியாகம் வேண்டும். இருளை நீக்கிஉலகில் ஒளிஏற்றமெழுகுவர்த்தி போன்ற தியாகம் வேண்டும்.

ஏழைகளுக்கு நற்செய்தியும் சிறையில் வாடியோரிற்கு விடுதலை வாழ்வும் குருடருக்குப் பார்வையும் வழங்க வந்த கிறிஸ்துவுக்கு கிடைத்தது மரணம். தம் தியாகத்தால் உலகிற்கு ஒளியேற்றினார் கிறிஸ்து நாமும் அந்த ஒளியைத்தொடர்ந்து அணையாது காக்க அன்பை அடிப்படையாய்க் கொண்டு தியாக தீபங்களாக அழைப்பிற்கேற்ப வாழ்வோமாக.

சோதிட பலன்

# மனிதனின் குண இயல்புகளை அப்பட்டமாக வெளிக் கொணரும் எண் சோதிடக்கலை

பேராசிரியர்
என். சாமி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### பிறந்த எண் 5-விதி எண் 1

இவர்களுக்கு இரும்பு, ஒப்பந்த வேலைகள், கமிஷன் ஏஜெண்ட் போன்ற தொழில்கள் சிறந்த இலாபத்தைக் கொடுக்கும். அல்லது இவை சம்பந்தமான தொழிற்சாலையில் வேலைக்கமர்ந்து பொருள் ஈட்டலாம்.

### பிறந்த எண் 5 விதி எண் 2

இவர்கள் ஆடம்பரப் பொருள்கள், அழகு சாதனங்கள், மின்சாரம், இரும்பு சம்பந்தமான தொழிலில் ஈடுபட்டு நிறையப் பொருள் சேர்க்கலாம். சிலர் கமிஷன் ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்டுச் செல்வம் சேர்ப்பர். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் உத்தியோகத்தில் அமர்ந்து செல்வம் திரட்டலாம்.

### பிறந்த எண் 5-விதி எண் 3

இவர்கள் பல்வேறுபொருள்களை வியாபாரம் செய்தல் நலம். மற்றும் வாகனத் தொழில், கமிஷன், ஒப்பந்த வேலைகளும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இவை சம்பந்தமான இடங்களில் பணியாற்றிப் பொருள் ஈட்டலாம்.

### பிறந்த எண் 5-விதி எண் 4

பேச்சாலும் பணம் திரட்டுவர். மற்றும் இரும்பு, ஒப்பந்த வேலைகள், கமிஷன் தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும். பச்சை நிறப் பொருள் வியாபாரம் நல்ல செல்வத்தை ஈட்டிக் கொடுக்கும். அல்லது இவைசம்பந்தப்பட்ட இடங்களில் இவர்கள் வேலையில் அமர்ந்து பெரும் பொருள் ஈட்டலாம்.

### பிறந்த எண் 5-விதி எண் 8

இவர்களுக்குத் தங்கம், இரும்பு சம்பந்தப்பட்ட தொழில்கள் மிகவும் பொருந்தும். மற்றும் வாகனம், மின்சாரம், ஒப்பந்த வேலைகளிலும் ஈடுபடலாம். அல்லது இவைகள் சம்பந்தப்பட்ட இடங்களில் அலுவல் பார்த்

# இடமாற்றம் பெறுவோர் விபரம் வெளியாகியது

(நேற்றைய தொடர்ச்சி)

### எழுதுநர் வகுப்பு II

தார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும், கே. சர

இத்தகைய வர்த்தகர்கள் ஏழைகளுக்கு உண்டி கொடுத்த - உயிர்காத்த புண்ணியத்தைச் செய்தவர்களாகவே கருதப்படுவர். மாறாக நீதி தவறி கண் மண் தெரியாது விலையேற்றி - பதுக்கி பணம் சம்பாதித்தவர்கள் உண்மையில் பணத்தையல்ல ஒரு நேர உணவிற்கே வழியின்றி உயிர் நீத்த ஏழைகளின் மரணப் பாவத்தையே சேர்த்து வைத்துள்ளார்கள்.

இத்தகைய பாவச் சொத்துகள் வீடுகளில் சேரும்போது அது ஏற்கனவே நேர்மை வழியில் தேடிய செல்வத்தையும் கரைத்து விடும் என்பது வள்ளுவன் கண்ட உண்மை. எனவே யாழ். வர்த்தகர்கள் வடபுலத்து மக்களின் இடம் பெயர்வு, சொத்தழிவு, உடல்உளப் பாதிப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு தர்மவழியில், வர்த்தக சேவையில் ஈடுபடுவது காலத்தின் கட்டாய தேவையாகும். இதனை யாழ். வணிகர்கழகம் முன்னின்று அவதானிப்பது மிக மிக அவசியமாகும். தனித்து வர்த்தகர்களின் நலன்களில் மட்டும் வணிகர்கழகம் அக்கறை காட்டாமல், நுகர்வோரின் நலன்களிலும் அக்கறை கொண்டு செயற்பட வேண்டும். அப்போது தான் அக்கழகத்தின் தோற்றம் அர்த்த புஷ்டி உடையதாக-மனிதநேயம் மிக்க ஓர் அமைப்பாக மிளிர முடியும்.

---

### பிறந்த எண் 5-விதி எண் 1

இவர்களுக்கு இரும்பு, ஒப்பந்த வேலைகள், கமிஷன் ஏஜென்ட் போன்ற தொழில்கள் சிறந்த இலாபத்தைக் கொடுக்கும். அல்லது இவை சம்பந்தமான தொழிற்சாலையில் வேலைக்கமர்ந்து பொருள் ஈட்டலாம்.

இவர்கள் ஆடம்பரப் பொருள்கள், அழகு சாதனங்கள், மின்சாரம், இரும்பு சம்பந்தமான தொழிலில் ஈடுபட்டு நிறையப் பொருள் சேர்க்கலாம். சிலர் கமிஷன் ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்டுச் செல்வம் சேர்ப்பர். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் உத்தியோ

...திரட்டலாம்.

### பிறந்த எண் 5-விதி எண் 3

இவர்கள் பல்வேறுபொருள்களை வியாபாரம் செய்தல் நலம். மற்றும் வாகனத் தொழில், கமிஷன், ஒப்பந்த

## பேராசிரியர் என். சாமி

வேலைகளும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இவை சம்பந்தமான இடங்களில் பணியாற்றிப் பொருள் ஈட்டலாம்.

### பிறந்த எண் 5-விதி எண் 4

இவர்கள் இரும்பு, வாகனங்கள், கமிஷன் தொழில் முதலியவற்றில் ஈடுபட்டு பொருள் சம்பாதிக்கலாம். மற்றும் வாய் சாமர்த்தியத்தால் பணம் ஈட்டக்கூடிய தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் உத்தியோகத்தில் அமர்ந்து திரண்ட செல்வத்தைச் சேர்க்கலாம்.

### பிறந்த எண் 5-விதி எண் 5

இவர்களுக்கு உலோகத் தொழில், வாகனத்தொழில், ஒப்பந்த வேலைகள், கமிஷன் தொழில் மிகவும்பொருந்தும். மற்றும் மருத்துவம் சம்பந்தப்பட்ட தொழிலும் பொருந்தும். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து செல்வம் சேர்க்கலாம்.

### பிறந்த எண் 5-விதி எண் 6

இவர்கள் இரும்பு, வாகனம் கமிஷன், ஒப்பந்தத் தொழில்களில் முன்னேறலாம். மற்றும் ஆடம்பரப் பொருள்கள் சம்பந்தமான அனைத்துத் தொழில்களும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து பொருள்ஈட்டலாம்.

### பிறந்த எண் 5-வீதி எண் 7

இவர்கள் எழுத்தாலும்,

...மற்றும் இரும்பு, ஒப்பந்த வேலைகள், கமிஷன் தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும். பச்சை நிறப் பொருள் வியாபாரம் நல்ல செல்வத்தை ஈட்டிக் கொடுக்கும். அல்லது இவைசம்பந்தப்பட்ட இடங்களில் இவர்கள் வேலையில் அமர்ந்து பெரும் பொருள் ஈட்டலாம்.

### பிறந்த எண் 5-விதி எண் 8

இவர்களுக்குத் தங்கம், இரும்பு சம்பந்தப்பட்ட தொழில்கள் மிகவும் பொருந்தும். மற்றும் வாகனம், மின்சாரம், ஒப்பந்த வேலைகளிலும் ஈடுபடலாம். அல்லது இவைகள் சம்பந்தப்பட்ட இடங்களில் அலுவல் பார்த்துப் பெரும் பொருள் ஈட்டலாப்.

### பிறந்த எண் 5 விதி எண் 9

இவர்கள் இரும்பு, உலோக வகைகள், ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்டு பெரும் பொருள் ஈட்டலாம். மற்றும் பிறரை மகிழ்விக்கும் தொழிலிலும், வழக்கு தீர்த்து வைத்தல் போன்றவற்றிலும் (வக்கீல், ஜட்ஜ்) முன்னேறலாம். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் அலுவல் பார்த்து பொருள்ஈட்டலாம்.

(தொடரும்)

---

# இடமாற்றம் பெறுவோர் விபரம் வெளியாகியது

(நேற்றைய தொடர்ச்சி)

### எழுதுநர் வகுப்பு II 'அ' 'ஆ'

நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி ஈ. சிவானந்தன், திருமதி எஸ். திருச்செல்வம், செல்வி ஏ. சபாரத்தினம் ஆகியோர் முறையே யாழ்ப்பாணம், பிரதேசசெயலகத்திற்கும், உடுவில் பிரதேச செயலகத்திற்கும், யாழ்ப்பாண விவசாயத் திணைக்களத்திற்கும், நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி எம். யோகேந்திரன், திருமதி வி. சதாசிவஐயர், திருமதி வி. அருட்செல்வம் ஆகியோர் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கும், கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். கிருஷ்ணகுமாரி யாழ் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கும், கரவெட்டிபிரதேசசெயலகத்தை சேர்ந்த பி. ஏ. தங்கராஜா பருத்தித்துறை பிரதேசசெயலகத்திற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

திருமதி கே. முருகேசபிள்ளை பருத்தித்துறை வலயக்கல்வி அலுவலகத்திற்கும், செல்வி ரி. செல்வபாக்கியம் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கும், செல்வி எம். சரவணபவானந்தம் பருத்தித்துறை வலயக்கல்வி அலுவலகத்திற்கும், திருமதிஎஸ். முருகதாஸ் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும், கே. சரவணபவானந்தன் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த செல்வி கே. சிவகௌரி சங்கானை பிரதேச செயலகத்திற்கும், செல்வி எம். குகராணி உடுவில் பிரதேச செயலகத்திற்கும், யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்தவர்களான செல்வி ஜே நாகையா, திருமதி கே. சந்திரகுமார், திருமதி ஆர். சுந்தரம், திருமதி ஆர். சாள்ஸ் மத்தியூ ஆகியோர் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கும், யாழ் விவசாயத் திணைக்களத்திலிருந்துபி. சிவபாலன் நல்லூர் பிரதேச செயலகத்திற்கும், உடுவில் பிரதேச செயலகத்திலிருந்து ரி. முருகையா நல்லூர் பிரதேச செயலகத்திற்கும், எஸ். தெய்வேந்திரன் சங்கானை பிரதேச செயலகத்திற்கும், எஸ். கிருஷ்ணபிள்ளை தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். கதிரமலை, திருமதி ரி. சிவஞானசுந்தரம், செல்வி என். கந்தையா ஆகியோர் கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

(மிகுதி நாளை தொடரும்)

---

## திருட்டு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்தடியிலுள்ள வர்த்தக நிலையமொன்றின் கதவு உடைக்கப்பட்டு பெறுமதி மிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 22 ஆம் திகதி திங்கள் நள்ளிரவு மழை பெய்து கொண்டிருந்தசமயம்ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தில்லையம்பலம் கந்தையா என்பவரின் கடையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

திருடர்கள் பால்மா வகை பற்பசை வகை பணம் என்பவற்றையும் கொள்ளையிட்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-120)

# யாழ். மாநகரில் மூன்றில் ஒருபகுதி இராணுவ முகாம்களாக உள்ளன

## யாழ். மேயர் ரவிராஜ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களுக்கு இன்று உடனடித் தேவையாக இருப்பது யுத்த நிறுத்தமே. இவ் யுத்தத்தை நிறுத்தச் செய்வதற்கு நாம் ஜனநாயகவழியில் முயற்கி செய்யவேண்டும்.

யாழ் மாநகர சபை மேயர் சட்டத் தரணி என் ரவிராஜ் அண்மையில் நடந்த மாநகர சபையின் மாதாந்தக்கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

யாழ்பல்கலைக்கழக சமூகம் அண்மையில் சுயநிர்ணய உரிமை தொடர்பாக தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியது அதே போன்று எமது உணர்வுகளையும் நாம் வெளிப்படுத்தவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ள இவ்வேளையில் அரசாங்கமும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் முழுமையாக நடைபெறவில்லை. மாநகர சபையின்எல்லைக்குள் .மூன்றிலொருபகுதி இராணுவ முகாம்களாகவும் பொலிஸ் நிலையங்கள் மற்றும் பாதுகாப்பு அரண்உள்ள பகுதியாகவுமே காணப்படுகின்றது. நகரின் பிரதானசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் சபையின் வருமானம் கணிசமான அளவுநிறைவடைந்துள்ளது என்றும் மேயர் ரவிராஜ் கூறியுள்ளர். [இ-21]

### குஜராத்தில்

சுமார் பதினையாயிரத்துக்கும் மேற்பட்டோர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் இதுவரை இரண்டாயிரத்து ஐந்நூறு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் மீட்புப் பணிகள் பெரும் எடுப்பில் மேற்சொள்ளப்படுவதாகவும் குஜராத் மாநில உள்துறை அமைச்சர் ஹரீம் பாண்டியா தெரிவித்துள்ளார்.

குஜராத்தின்முக்கியநகரான அஹமதாபாத் மற்றும் புஜ் நகரங்கள் பாரிய சேதமடைந்துள்ளதாகவும் அப்பகுதி மயானம் போன்று காட்சியளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நிவாரணப் பணிகளுக்கு இந்தியாவுக்கு உதவ உலக நாடுகள் பலவும் நேசக்கரம் நீட்டியுள்ளதுடன் மீட்புப்பணிக்கு உதவ ஐக்கிய நாடுகள் சபை தயாராக இருப்பதாகவும் சபையின் செயலர் கொபிஅனான் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க நேற்றுக்காலை இந்திய நேரம் காலை 10 30 மணிக்கு மீண்டும் அஹமதாபாத் நகரை பூமியதிர்ச்சி லேசாக தாக்கியதென்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### தொழிற்

தெரியவருகிறது

விடுதலைப் புலிகள் சமாதானத் தீர்வுக்கு வசதியாக யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். இதற்கு அமைவாக அரசும் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளவேண்டும் என்றும் அன்ரன் பாலசிங்கம் தொழிற்கட்சிஎம்.பிக்களிடம் எடுத்துக் கூறி வருவதாகவும் அச்செய்திமேலும் தெரிவித்துள்ளது. (ந)

### நம்பிக்கை

லேயே நாட்டில் விலைவாசி உயர்வும் பொருளாதார நெருக்கடியும்ஏற்பட்டுள்ளது இது ஒரு தற்காலிகமானதே.

#### நோர்வேயின்சமாதான முயற்சி வெற்றி அளிக்கும்?

இந்தநிலைமை நோர்வே எடுத்துவரும் சமாதான முயற்சி வெற்றிஅளிக்கும்போது மாறிவிடும் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் விடுதலைப்புலிகளுடன்சமாதான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறார் இதன் மூலம் சமாதான பதிலை அரசுக்கு தெரிவிப்பாரானால் புலிகளுடன் அரசு சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும்.

இப்பேச்சுவார்த்தையின் போது அரசுற்கு நம்பிக்கை ஏற்பட்டால் யுத்த நிறுத்தம் செய்வது தொடர்பாக பரிசீலனை செய்வோம். என்றும் ஜனாதிபதி கூறினார் [வ

### பாக். .

உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களையும் இராணுவஉயர்அதிகாரிகளையும்சந்தித்து பேச்சு நடத்துவார் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. (வ)

### யுத்த

தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தில் அரசாங்கம் சந்தேகம் கொள்ளுமானால் அதன் உண்மை நிலையை கண்டு கொள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஒன்றிடம் அப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்றும் அக்குழுவின் அவதானிப்பு அறிக்கை மூலம் உண்மையை அறிந்து கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

### ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும

(மந்திகை)

தென்மராட்சிப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கண்டெடுத்துள்ள ஆறு மோட்டார் சைக்கிள்கள் 52ஆவது படையணியின் தலைமைச் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளது உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங் காட்டி அவற்றினைப்பெற்றுக் கொள்ளுமாறு படையினர் தென்மராட்சிந் பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளை மூலம் அறிவித்துள்ளனர்.

கண்டெடுக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் எஞ்சின் இலக்கங்கள் வருமாறு:

CF 50 CE2796286, C 50 E 6840743, C 50 E 2457 708, B 125 ET 1002846, MD 901931303, CF 50 E22 66041. (வ, 23)

### இலங்கை

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினிடம் கையளிப்பதற்கென்று இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொடுத்தனுப்பிய செய்தியை அமைச்சர் கதிர்காமர் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இகோர் இவனோவிடம் இச் சந்திப்பின் போது கையளித்துள்ளார்.

இருதரப்பு ஒத்துழைப்பும் பலப்படுத்தக்கூடிய வகையிலான எந்தப் பிரச்சனையும் இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இல்லை இரு நாடுகளும் நெருக்கமான உறவுகளுடன் ஒத்திசைவாக இருக்கின்றன என்று கூட்டறிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் இடம் பெற்றசெய்தியாளர் மாநாட்டில்ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் கதிர்காமர் கருத்து தெரிவிக்கையில்;

தனது ரஷ்ய விஜயம் புதிய பக்கமொன்றைத் திறந்துள்ளதாகவும், அரசியல் மற்றும் இராணுவ உறவுகள் பொருளாதார ஒத்துழைப்பு உறவுகள் வலுப் பெற்றுள்ளதாக தெரிவித்தார். [இ]

### கைதடி

கைதுசெய்யப்பட்ட வர்கள் நேற்று பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் மீட்டுவந்த பொருட்களுடன் காணப்பட்டனர். எனினும் இவர்கள் நேற்று மாலைவரை விடுதலை செய்யப்படவில்லை.

இதேவேளை அண்மையில் விடுவிக்கப்பட்ட தென்மராட்சிப் பகுதிக்கு பொருட்களை மீட்டுவர, பொருட்களின் உடமையாளர்கள் அப் பகுதிக்கு செல்கின்றனர். அதே நேரம் இச்சூழ் நிலையைப் பயன் படுத்தி திருடர்களும்செல்கின்றனர் இதனால்உண்மையாக பொருட்களை மீட்டுவரஅப்ப பகுதிக்கு செல்லும் வீட்டுஉரிமையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவேஇந்தநடவடிக்கையில் அரச அமைப்புக்கள் தலையிட்டு பொருத்தமானதொரு நடவடிக்கையை ஏற்படுத்தி, உரியவர்கள்தமது உடமைகளைப் பெற்றுக் கொள்ள வகைசெய்ய வேண்டும்மென பொலிஸ் நிலையப் பகுதியில் குழுமி நின்ற பலராலும் கருத்துத் தெரிவிக்கப் பட்டது. (இ)

### யாழ் . . .

கிழக்கிற்கு வெளியே நிரந்தர வசிப்பிடங்களைக் கொண்ட வைத்தியர்களுக்கே 2000ம் ஆண்டுக்கான விசேட மேலதிக கொடுப்பனவுகளை சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது

உயிராபத்தான சூழ் நிலை அதிகரித்தவேலைப்பளு ஆகியவற்றுள்மத்தியில் கடும்சிரமத்துடன் பணியாற்றும் வடகிழக்கு வைத்தியர்கட்கு உடனடியாக இக்கொடுப்பனவுகள வழங்கவேண்டும் என்று சுகாதார அமைச்சுக்கு கோரிக்கை விடுத்தே இவ் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படஇருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதற்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால் தாம் தொடர்ச்சியான தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### நில நடுக்கம் இலங்கையை பாதிக்காது

[கொழும்பு]

இந்திய மேற்கு மாநிலமான குஜராத்தைத் தாக்கி பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்ட நில நடுக்கம் மீண்டும் எற்படவாய்ப்புகள் உள்ளதாகஎதிர்பார்கப்பட்ட போதும் அது இலங்கையை எந்த வகையிலும் பாதிக்கமாட்டாது என்றும் நிலநடுக்கம் தொடர்பாக மக்கள் அச்சம்கொள்ளத்தேவையில்லை என்றும் பேராதனைப் பல்கலைக்கழக புவியியற்றுறை பேராசிரியர் ஒருவர் நேற்று தெரிவித்துளளார். (வ)


**உடன் தேவை**

மோட்டரோல் தொலைபேசி இணைப்பை விற்கவுள்ளவர்கள்

நேரிலோ, தபால் மூலமாகமோ உடன் தொர்பு கொள்ளவும்.

பொ. தனலெட்சுமி
77, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1930)



ஸ்ரீராமஜெயம்
அருள்வளர்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்

**மஹா கும்பாபிஷேகம்**

**29-01-2001**

காலை 7-33 முதல் 8-00 மணி வரை
எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம்
இன்று 28-01-2001 காலை 11-00 மணி வரை

(கி-1928)



அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர்கோயில்

**நூதன பிரதிஷ்ட மஹா கும்பாபிஷேகம்**

29 - 01 - 2001 திங்கட்கிழமை
காலை 7-00 மணி - 8-33 மணிவரை
நடைபெறும்
எங்கள் இணைய ஆஞ்சநேயர் சுவாமியை
யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வரவழைத்த
பெருமை எமது மதிப்பிற்கும் அன்புக்குமுரிய
**சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள்**
தர்மகர்த்தாவைச் சேரும் (பக்க துணை)

**யாழ் வேணி களஞ்சியம்**
**ஹப்பி ரெக்ஸ் ரெயில்ஸ்**
உரிமையாளர்
நெல்லியடி.

**லாலா சோப் தொழிற்சாலை**
அச்சுவேலி.

(கி1927)



**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
விஜய், தேவயானி
சூர்யா
நடித்த
**"ப்ரண்ஸ்"**
10-15 (ப. நே)
2-15 (ப. நே)
CD பிரதி
புதிய வெளியீடு
(கி 1910)



**குமரன் தொலைத்தொடர்புசேவை**

காரைநகர்

தொலைபேசி இயக்குநர் (ஆண்)
உடன் தேவை

க. பொ. த. உயர்தரம் கற்ற 20-30 வயதுக்குட்பட்ட ஆண்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்;

குமரன் கொம்யூனிகேசன்,
27, சப்பல் வீதி, (2ம் குறுக்கு சந்தி,)
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல. 2765

(கி-1929)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.